


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524


















29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரம் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

உதயம் 1582 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 31, 2026


# இலங்கை அரசு கடைப்பிடிக்கும் "கசப்பான கொள்கை" எது தெரியுமா?

## தனது பாதுகாப்பில் உள்ள கைதிகள் கொலை செய்யப்படும்போது, அவர்களுக்காக நீதியைக் கோரும் குரலின் உரப்பானது, அவர்களின் மொழியையும் இனத்தையும் வைத்தே அரசால் தீர்மானிக்கப்படுகிறது!

அரசொன்றின் பாதுகாப்பில் இருக்கும் கைதிகள் படுகொலை செய்யப்படும்போது, அவர்களுக்கு நீதி கோரும் குரலின் உரப்பு, அவர்களின் மொழியையும் இனத்தையும் வைத்தே தீர்மானிக்கப்படுகிறது என்பதுதான் இலங்கையின் கசப்பான உண்மை. தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டபோதெல்லாம் மௌனத்தையே ஆயுதமாக ஏந்திய அன்றைய எதிர்க்கட்சிகள், சிங்களக் கைதிகளின் மரணத்தின்போது மட்டும் நீதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்து மனித உரிமைகள் என குரல் எழுப்புவது ஏன்? என கொழும்பிலிருந்து பாலா எழுதுகின்றார்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)



## Toronto City Council not only allocated Land to Build Tamil Community Centre but also waived the Building Permit Fees!

# தமிழ்ச் சமூக மையத்திற்கு காணியை வழங்கியதோடு மட்டுமன்றி. கட்டட அனுமதிப் பத்திர கட்டணத்தையும் "விட்டுக் கொடுத்த" ரொறன்ரோ நகர சபை!



கனடா வாழ் தமிழ் மக்களுடைய ஒரு நீண்ட நாள் கனவாக இருந்த ஸ்காபுரோ "தமிழ்ச் சமூக மைய"த்திற்கு உரிய காணியை நீண்ட கால குத்தகைக்கு வழங்கியதோடு மட்டுமன்றி. நகரசபையின் நடைமுறையில் உள்ள கட்டட அனுமதிப் பத்திர கட்டணத்தையும் "விட்டுக் கொடுத்த" ரொறன்ரோ நகர சபை இந்த தகவலை அண்மையில் நடைபெற்ற உற்சாகமான வைபவத்தில் ரொறன்ரோ மாநகரத்தின் மேயர் ஒலிவியா சோ அவர்கள் மூலம் தமிழ்ச் சமூகத்திற்கு அறிவித்தது.

கடந்த 24-07-2026 அன்று வெள்ளிக்கிழமையன்று 251 **Staines Road- Scarborough,** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள தமிழ்ச் சமூக மையம் எதிர்காலத்தில் எழுந்து நிற்கவுள்ள காணியில் நடைபெற்ற உற்சாகமான வைபவத்தில் ரொறன்ரோ மாநகரத்தின் மேயர் ஒலிவியா சோ இதற்கான அறிவிப்பைச் செய்தார்.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)

# "ZEE தமிழ்" தொலைக்காட்சியின் "தமிழா! தமிழா! நிகழ்ச்சி புகழ் ஆவுடையப்பன் கனடா வருகின்றார்!

கனடாவில் வெளிவரும் மாதப் பத்திரிகையான "தேசம்" ஆண்டு விழா-வில் கலந்து கொண்டு சபையோரை உற்சாகப்படுத்தவும் மகிழ்விக்கவும் **ZEE** தமிழ்" தொலைக்காட்சியின் "தமிழா! தமிழா! நிகழ்ச்சி புகழ் ஆவுடையப்பன் கனடா வருகின்றார் என்ற தகவலை மேற்படி பத்திரிகையின் ஆசிரிய பீடத்தினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் 2026 நடுப்பகுதியில் ஸ்காபுரோவிலும் ரொறன்ரோவிலும் நடைபெறவுள்ள விழாக்களில் "தமிழா! தமிழா! நிகழ்ச்சி புகழ் ஆவுடையப்பன் கனடா வாழ் தமிழ் அன்பர்கள் மற்றும் ரசிகர்களை தேர்வு செய்து தனது நெறியாழ்கையில் மேடை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 647 891 7725 என்னும் இலக்கத்தை அழைக்கலாம் என வேண்டப்படுகின்றனர்















# "சங்ககாலக் கவிதைகளின் தொடர்ச்சியை பேணுவதில் எமது கனடாக் கவிஞர் கழகத்தின் உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள்"

## கழகத்தின் வெளியீடான "கவிச்சரம்" வெளியீட்டு விழாவில் தலைவர் "மாவிலிமைந்தன்" சண்முகராஜா புகழாரம்







"கனடாவில் முதன்முதலாக கவிதை இலக்கண வகுப்புக்களை ஆரம்பித்து இன்று 15 வருடங்களை எட்டியுள்ள எமது கனடா தமிழ்க் கவிஞர் கழகமானது எண்ணற்ற மரபுக்கவிஞர்களை இந்த மண்ணில் மாத்திரமல்ல வேறு நாடுகளிலும் உருவாக்கியுள்ளது. ஆரம்பத்தில் குறைந்தளவு அங்கத்தவர்களைக் கொண்டதாக விளங்கிய எமது கழகம் தற்போது இளைய தலைமுறையைச் சேர்ந்த கவிஞர்களை உள்வாங்கி அவர்களும் ஆர்வத்துடன் மரபுக் கவிதைகளை வடிப்பது எப்படி என்பதை மரபுக் கவிதை வகுப்புக்களில் கற்றுவருகின்றார்கள். அவர்கள் அனைவரும் தங்களை தரமான மரபுக்கவிஞர்களாக உயர்த்திக் கொள்ளும் கடினமான பணியைச் சுமந்தவர்களாக இருந்து அத்துடன் எமது கவிஞர் கழகத்தின் தமிழிலக்கியப் பணியை ஆற்றியும் வருகின்றார்கள் என்பதையும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். அது என்னவென்றால், சங்ககாலக் கவிதைகளின் தொடர்ச்சியை பேணுவதில் எமது கனடாக் கவிஞர் கழகத்தின் உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள்.

இவ்வாறானவர்களின் ஆற்றல் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து செல்வதால் அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் சுத்தமானதும் எவ்விதமான வழுக்களும் அற்ற மரபுக்கவிதைகளைப் படைத்து தற்கால தமிழ் இலக்கிய







வளர்ச்சியிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றார்கள். இவ்வாறான கவிஞர் பெருமக்கள் நாம் வாழும் புலம்பெயர்ந்த நாடான கனடாவில் தரமானதோர் உலகிற்கு அரிய பணியை ஆற்றுவதோடு தமிழ்க் க்விதை உலகிற்கும் அழகிய கவிதைகளைப் படைக்கும் சிற்பிகளாக விளங்குகின்றார்கள். எனவே அவர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு எமது கனடா தமிழ்க் கவிஞர் கழகத்தின் வளர்ச்சியில் ஆர்வத்தோடு உழைத்து வரும் பெரியோர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள்,பத்திரிகையாளர்கள் மற்றும் கவிதைச் சுவைஞர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்".

இவ்வாறு கடந்த 26-07-2026 அன்று ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கனடா தமிழ்க் கவிஞர் கழகத்தின் வெளியீடான "கவிச்சரம்" கவிதை நூல் வெளியீட்டு விழாவில் தலைமைஉரையாற்றிய "மாவிலிமைந்தன்" சண்முகராஜாஅவர்கள் புகழாரம் சூட்டும் வார்த்தைகளை சபையினரோடு பகிர்ந்து கொண்டார்.

விழாவை ஆரம்பத்தில் தொடக்கிவைக்கும் பணியை கழகத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய பொருளாரரும் விரிவுரையாளருமான குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்கள் ஏற்று சிறப்பாக நகர்த்திச் சென்றார்.

ஆரம்பத்திலிருந்து இறுதி வரை கலைநிகழ்ச்சிகள் - கவிதைகளை அரங்கேற்றுதல் - சிறப்பான உரைகள் - வாழ்த்துப் பாக்கள் - நூல்வெளியீடு- "கவிச்சரம்" பற்றிய ஆய்வுரை மற்றும் வெளியீட்டு உரை போன்ற தொய்வில்லாத அம்சங்கள் விழாவை அழகிய முறையில் நகர்த்திச் சென்றன என்றால் அது மிகையாகாது.

"கவிச்சரம்" கவிதைத் தொகுப்பு தொடர்பான ஆய்வுரையை முனைவர் வாசுகி நகுலராஜா அவர்களும் வெளியீட்டு உரையை பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களும் சிறப்பான முறையிலும் சபையோரை உற்சாகப்படுத்தும் வகையிலும் ஆற்றினார்கள்.

அங்கு தங்கள் கவிதைகளை வாசித்து சபையோரை உற்சாகப்படுத்திய கவிஞர்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் மரபுக் கவிதை வகுப்புக்களில் பங்கெடுத்து வருகின்றார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் அனைத்து கவிதைகளும் இலக்கணச் சுத்தமாக அமைந்திருந்ததோடு சந்தமும் சொல்வீச்சுக்களும் நிறைந்தவையாக இருந்தன என்பதும் "கவிச்சரம்" கவிதைத் தொகுப்பில் அடங்கியும் அனைத்துக் கவிதைகளும் அந்தத் தரத்தை எட்டியிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

***- Uthayan LJI Journalist Arjune -***


Carefirst Family Health Team

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

உதயன் கதிரோட்டம்

# யூலைப் படுகொலைகளின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டை, உணர்வுகளைப் பகிர்ந்த வண்ணம் நாம் கடந்தாலும் தொடர்ச்சியான கடமைகள் உள்ளதையும் அறிவோம்!

யூலை 1983 என்னும் அந்த "கொடிதானதும் துயரும் பயங்கரமும் நிறைந்த அந்த காலப்பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களையும் இழப்புக்களையும் நினைவில் நிறுத்தி இந்த யூலை மாதத்தின் இறுதி நாளை நாம் இன்று அடைந்துள்ளோம். எனினும் இந்த யூலை கொடுமைகளை மறந்து விடாமல் மனதில் நிறுத்தி அந்த நினைவுகளுடன் நாம் எப்போதும் ஒன்றியிருப்போம் என்று உறுதியும் எடுத்துக் கொள்வோம்.

தற்கால உலக அரசியலில் இனம் மற்றும் மொழிகளின் அடிப்படையில் மக்களை கூறுபோடுவதில் அரசியல்வாதிகள் தங்கள் காய்களை நகர்த்திய வண்ணம் தங்கள் பதவிகளை எப்போதும் தக்கவைத்துக் கொள்ளவே முயல்வார்கள். குறிப்பாக முதலாளித்துவப் போக்குள்ள அரசியல்வாதிகள் அந்த தேசத்தின் மக்களில் விவசாயிகளாகவும் தொழிலாளர்களாகவும் உள்ள மக்களை இனம் மற்றும் மதம் சார்ந்து பிரித்து வைப்பதே தங்கள் முதற்பணி என்பதை கவனித்துச் செய்வார்கள்.

அவ்வாறு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அவர்களை மதம் மற்றும் மொழி சார்ந்து பிரிந்து நிற்கச் செய்தால் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் போராட்டம் என போராடும் சக்தியை அந்த உழைக்கும் வர்க்கம் குறைத்துக் கொள்ளும் என்ற உண்மையை முதலாளித்துவம் சார்ந்து தங்கள் அரசியலை நகர்த்திச் செல்லும் அரசியல்வாதிகள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான ஒரு அரசியல் காய் நகர்த்தல்களே இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் முதலாளித்துவ அரசியல்வாதிகள் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதமாக விளங்கியது. இதனால் தான் இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னர் உழைக்கும் மக்கள் என்ற ஒரே வர்க்கமாக தங்கள் உரிமைகளுக்காக போராடியவர்கள் பின்னாளில் மொழிசார்ந்தும் மதம் சார்ந்தும் பிரித்தாளப்பட்டார்கள். இதன்" விளைவாக இலங்கையில் இனவாதம் இருப்பக்கங்களிலும் பிரயோகிக்கப்பட நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இவ்வாறான திட்டமிட்ட பிரித்தாளும் தந்திரத்திரத்தில் முக்கியமானவர்களாக விளங்கிய டி. எஸ் சேனநாயக்க மற்றும் எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க அடங்கிய பல சிங்கள தேசிய அரசியல்வாதிகளோடு தமிழ் அரசியல்வாதிகளும் கைகோர்த்து நின்றார்கள் என்பதை சாதாரண தமிழ் மற்றும் சிங்கள மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதனால் அவர்களும் இனவாதச் சேற்றில் அள்ளுண்டு செல்லவேண்டியவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இவ்வாறாக இயற்கை வளங்களையும் சாதகமான கால நிலையையும் கொண்ட இலங்கைத்தீவில் அமைதி இன்மை ஏற்பட இனவாதம் காரணமாக விளங்கியது. பெரும்பான்மை இன சிங்கள மக்களை திருப்திப் படுத்தும் வகையில் சிங்களத் தலைவர்களின் தலைமையில் இயங்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி பதவிக்கு வந்து மாணவர்களின் பல்கலைக் கழக பிரவேசத்தில் தரப்படுத்தலை அறிமுகம் செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் சாத்வீகப் போராட்டங்களை ஆரம்பித்தார்கள். குறிப்பாக தமிழ் மாணவர் பேரவை" போன்ற மாணவர்களின அமைப்புக்கள் போராட்டங்களை நடத்துவதற்காக மாணவர்களையும் பொது மக்களையும் ஒன்று திரட்டினார்கள். அப்போது அந்தப் போராட்டங்களை அடக்கும் வகையில் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கைதுகள் ஆகியவற்றைச் செய்ய இலங்கைப் பொலிசாருக்கு அரசாங்கங்கள் அழுத்தங்கள் கொடுக்கத் தொடங்கின. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளா டேவிற்சன் மற்றும் பொன் சிவகுமாரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வாறான மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் போராட்டங்களே பின்னாளில் ஆயுதங்கள் ஏந்திய போராட்டங்களாகவும் தாக்குதல்ககளாகவும் மாற்றம் பெற்றன. இந்த மாற்றங்களை தமிழ் மக்களும் வரவேற்று தங்கள் ஆதரவை வழங்கினார்கள். தமிழ் மக்களுக்காக விடுதலையைப் பெற்றுக்கொள்ள் "ஆயுதப் போராட்டம்" ஒன்றே உகந்தது என்பதை மக்களும் மாணவர்களும் இளைஞர்களும் ஏற்றுக்கொணடார்கள்.

இந்த போராட்ட வடிவத்தின் வளர்ச்சியானது 1983ம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடத்தப்பெற்ற தாக்குதலில் 23 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட இந்த சம்பவம் சிங்கள அரசியல்வாதிகள் பலரையும் சில தமிழ் அரசியல்வாதிகளையும் அதிரச் செய்தது. சிங்கள இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டதற்கு இனவாத சாயம் பூசப்பட்டு பின்னர் அது இனக்கலவரமாக வெடித்தது. அந்தக் காலப்பகுதியில் சுமார் ஒரு வார காலத்திற்கு இலங்கை எங்கும் நடத்தப்பெற்ற இனவாதக் கொலைகளே இன்றும் நாம் 43 வது ஆண்டாக நினைவு கூர்கின்ற ஒரு துயரங்கள் நிறைந்த நினைவுகளாக எம்மோடு பயணிக்கின்றது. பின்னரும் தொடர்ச்சியாக நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு இரையாகிப் போன எம் உறவுகளை நாம் உருக்கத்துடன் நினைவு கூறும் இந்த யூலைப்டுகொலை அனுஸ்டிப்பை நாம் அனைவரும் உணர்வுகளைப் பகிர்ந்து கடந்து செல்வோம்!

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 — Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

JJ Rental
கதிரை மேசை வாடகைக்கு
416.553.1540 | 647.960.1415



உங்கள் வீட்டு வைபவங்களுக்குத் தேவையான கதிரைகள், மேசைகள், பார்க் ஒன்றுகூடலுக்கு வேண்டிய கதிரைகள், மேசைகள், TENTS, BBQ மிஷின் GAS அடுப்புகள் அனைத்தும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
416.553.1540 | 647.960.1415

உணவகத்தில் வேலை வாய்ப்பு

ரொறன்ரோவில் உள்ள உணவகம் ஒன்றில் Dish Washer ஆக வேலை செய்ய உடனடியாக ஆண் ஒருவர் தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும். அத்துடன் வேலையில் உயரவும் வாய்ப்பு உண்டு. தொடர்புகளுக்கு: kumargurunala@gmail.com - அல்லது 647.617.0662 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

One Bedroom Basement வாடகைக்கு உண்டு

One Bedroom Basement உடனடியாக வாடகைக்கு உண்டு HWY 27 and Langstaff Road. சந்திப்பிற்கு அருகில். Woodbridge, Brampton ஆகிய இடங்களுக்கு அருகில்
மேலதிக விபரங்களுக்கு: 416 428 2141

தொழிற்சாலை ஒன்றில் உடனடி வேலை வாய்ப்புக்கள்

*மரவேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள CARPENTER
*Spray Painting செய்வதில் அனுபவத்துடன் வேலயாட்கள்
ஸ்காபுறோ நகரில் Bellamy-Progress சந்திப்புக்கு அருகில் உள்ள Doors - Windows தொழிற்சாலைக்கு மரவேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள CARPENTER மற்றும் Spray Painting செய்வதில் அனுபவம் உள்ள தொழிற்சாலை வேலயாட்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்
தொடர்புகளுக்கு: 416-875-4119 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது நீடிப்பைத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் இல்லை என்கிறார் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்கும் தீர்மானத்துக்காகச் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டிய அவசியம் கிடையாது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ”ஒரு சட்டத்தரணி என்ற ரீதியில் இந்த அரசமைப்புத் திருத்தத்துக்காகச் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டிய எந்தவொரு அவசியமும் இல்லை.

அரசமைப்பின் 83ஆவது சரத்தில் எவற்றுக்கு மக்கள் தீர்ப்பு அவசியம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அரசு மேற்கொள்ளும் இந்த ஓய்வுபெறும் வயதெல்லை நீடிப்பு மற்றும் நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திருத்தங்கள் அந்த எந்தவொரு சரத்திலும் உள்ளடங்கவில்லை. கடந்த காலத்தில் 20ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் நீதியரசர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட போதும் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லவில்லை.

இந்தத் திருத்தத்தை எவரேனும் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தி, அதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தால் மட்டுமே அரசு அத்தகைய நடைமுறைக்குச் செல்ல வேண்டியிருக்கும். எனினும், தற்போதைய சட்டச் சூழலின்படி அவ்வாறு தீர்ப்பு வரும் என்று நான் நினைக்கவில்லை.

நீதிமன்றங்களில் வழக்குகள் மாதக்கணக்கில், வருடக் கணக்கில் தாமதமாவதால் பொதுமக்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். நீதித்துறை அமைப்பும் ஏனைய துறைகளைப் போலவே திறமையாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும்.



கடந்த 10-15 வருடங்களாக எதிர்காலத் தேவைகளைக் கணித்து நீதியரசர்களின் எண்ணிக்கையை உயர்த்தாததாலேயே இன்று வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன.

இந்த ஓய்வுபெறும் வயது நீடிப்பானது மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்துக்கு மட்டும் அல்லாமல், நீதித்துறை அமைப்புச் சட்டத்தைத் திருத்தி மாவட்ட நீதிபதிகள், நீதிவான் நீதிபதிகள் உள்ளிட்ட அனைவருக்குமே ஓய்வுபெறும் வயதை 2 ஆண்டுகள் நீடிக்கின்றோம். 1978ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த ஓய்வுபெறும் வயது திருத்தப்படவில்லை. பெரும்பான்மையான சர்வதேச நாடுகளில் ஓய்வுபெறும் வயது 70 ஆக உள்ளதால், அனுபவம் வாய்ந்த நீதிபதிகளின் சேவையை மேலும் சில ஆண்டுகள் பயன்படுத்திக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

நீதித்துறைச் செயற்பாடுகளை விரைவுபடுத்துவதுடன், இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் வழக்குகள் தாமதமாகும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.” - என்றார்.

# "அதிஉயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்தும் திட்டத்தைக் கைவிடுக"

## இலங்கை அரச தலைவருக்கு யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கம் கடிதம்!

அதிஉயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்தும் நோக்கில் அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவரும் அமைச்சரவையின் முடிவை மறுபரிசீலனை செய்து கைவிடுமாறு கோரி, யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கம் சிறிலங்கா அரச தலைவர் அனுர குமார திசாநாயக்கவுக்குக் கடிதம் எழுதியுள்ளது.

அதிஉயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்தும் வகையில் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவர அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கம் தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது. இது தொடர்பில் சிறிலங்கா அரச தலைவர் அனுர குமார திசாநாயக்கவுக்கு, யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஒப்பமிட்டு 28.07.2026 அன்று கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கீழ் நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகள் உட்பட அனைத்து நீதிபதிகளுக்கும் பொருந்தும் வகையிலும், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் ஒரு விரிவான முயற்சியின் பகுதியாகவும் இருக்கும் பட்சத்தில், நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை உயர்த்துவதற்கு கொள்கை அளவில் யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கம் எதிரப்பைக் கொண்டிருக்கவில்லை என அக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், முன்மொழியப்பட்டுள்ள இந்த அரசியலமைப்புத் திருத்தமானது, நீதித்துறைக்கு நிறைவேற்று அதிகார அமைப்பால் வழங்கப்படும் ஒரு சலுகையாகவோ அல்லது நீதித்துறையின் செயல்பாடுகளில் தலையிடும் நடவடிக்கையாகவோ பார்க்கப்படும் சூழலை உருவாக்கக் கூடாது என்பதில் தாங்கள் தீவிர கவனம் செலுத்துவதாகச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. நீதித்துறையின் சுயாதீனத்தையும், நீதித்துறை மீது பொதுமக்களுக்கு இருக்கும் நம்பிக்கையையும் பாதுகாப்பதற்கு இத்தகைய சந்தேகங்களுக்கு இடம் தராமல் இருப்பது இன்றியமையாததாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தற்போதைய அரசாங்கம் அரசியலமைப்பை முழுமையாக இரத்து செய்து, புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர முனையும் தருணத்தில் மட்டுமே ஓய்வுபெறும் வயதை உயர்த்தும் விடயத்தைப் பரிசீலிக்க முடியும் என யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கம் கருதுகிறது. குறுகிய அல்லது குறிப்பிட்ட நோக்கம் கருதிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், அரசியலமைப்புவாதத்திற்கான மரியாதையைக் குறைப்பதுடன், மக்களாட்சியின் நல்நெறிப் கொள்கைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியையும் பலவீனப்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போது முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவரும் முயற்சிகளை அரச தலைவர் மறுபரிசீலனை செய்து உடனடியாகக் கைவிட வேண்டும் என யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மீண்டும் செப்ரெம்பர் 22 வரை ஒத்திவைக்கப்பட்ட மண்டைதீவு படுகொலைகளின் வழக்கு!



மண்டைதீவு படுகொலையின் வழக்கு 28-07-2026 அன்று செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் அனீபா ரஜீவ் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் மீண்டும் எதிர்வரும் செப்ரெம் பர் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு புதைகுழி தொடர்பான வழக்கின் விசாரஅன்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் அனீபா ரஜீவ் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் மேலதிக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த வழக்கின் வழக்காளிகள் சார்பில் சட்டத்தரணி செபமாலைமுத்து கிருஸ்ரபெலினாவுடன் காணாமல் போனோர் அலுவலகத்தின் சட்டத்தரணி பூர்ணி மரியநாயகம், அதன் பிராந்திய இணைப்பாளர் த.செல்வக்குமார், வேலணை பிரதேச சபையின் உறுப்பினரும் தீவக முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான சுவாமிநாதன் பிரகலாதன் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர் அனுஷிய ஜெயகாந்த் ஆகியோர் இன்று குறித்த வழக்கு சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

முற்பகல் 10 மணிக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட குறித்த வழக்கு வாதப் பிரதிவாதங்களின் பின் பிற்பகல் 2.30 மணிவரை ஒத்திவைக்கபட்டது.

பிற்பகல் 2.30 மணிக்கு மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்ட குறித்த வழக்கின் போது வழக்காளிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளால் குறித்த விடையம் தொடர்பிக் அடையாளப்படுத்தப்பட்ட இடத்திற்கி பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அடையாளப்படுத்தப்பட்ட குறித்த காணியின் உரித்து யாருடையது என்பதை உறுதி செய்து அறிக்கை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று, கிராம சேவகர், பிரதேச செயலர், பிரதேசத்தின் தவிசாளர், வழக்கின் சார்பானவர்கள், சட்ட விசாரணை அதிகாதி, பொலிசார், பிரதேச முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல் நடத்த ஆவன செய்யுமாறு நீதிமன்றில் கோரிக்கை முன்வைத்தனர்.

அத்துடன் சட்டவிசாரணை அதிகாரியின் அறிக்கை கிடைத்ததும் அகழ்வுக்கான நிதிதிரட்டலுக்கு துறைசார் அமைச்சிடம் கோரிக்கை விடுத்து நிதி பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்றும் சுட்டிக்காடியிருந்தனர்.

முன்வைக்கப்பட்ட வியாக்கியானங்களை அடுத்து குறித்த வழக்கு வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முன்பதாக கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 04 ஆம் திகதியன்று குறித்த சம்பவத்தில் தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரில்டா என்பவர் மற்றும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினரும் தீவக முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இன்நிலையில் இந்த வழக்கு கடந்த 17.09.2025 அன்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# செம்மணி மனிதப் புதைகுழியில் மழைக்கவசத்துடன் சிறுவனின் எலும்புக்கூட்டுத் தொகுதி மீட்கப்பட்டது மக்களின் மனங்களை உலுக்கியது!



- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வின்போது புதிதாக 7 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்தோடு மழைக்கவசத்துடனும், காலில் காலுறை அணிந்தவாறும் சிறுவனின் என்புத் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 41ஆம் நாள் அகழ்வு இடம்பெற்றது.

கடந்த 25ம்திகதி வெள்ளிக்கிழமை அன்றைய அகழ்வின் போது புதிதாக 7 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன் ஏற்கனவே அடையாளம் காணப்படட்ட 9 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 478 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 464 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அன்றைய தினம் சிறுவனின் ஒரு என்புத் தொகுதி மழைக்காலத்தில் அவனது உடலோடு ஒட்டிய நிலையில் மழைக்கவசத்துடனும், காலில் காலுறை அணிந்தவாறும் காணப்பட்ட காட்சி அங்கு நின்றிருந்த அனைவரின் மனங்களை உலுக்கியது என்று எமது சய்தியாளர் அறிவித்துள்ளார். அந்த என்புத் தொகுதியைச் சூழ சவப்பெட்டியின் அடையாளங்களும் காணப்படுகின்றன.

மேலும் அன்றைய அகழ்வில் என்பு எச்சங்கள் குவியல்களாக மூன்று அடையாளம் காணப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு 35, 36, 37 என இலக்கமிடப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றக் கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் ஆணிகள் மற்றும் சீமெந்திலான தட்டைப் பொருள் ஒன்றும் அடையாளம் காணப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு சான்றுப் பொருளாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 140 சான்றுப்பொருள்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்காக ஜனாதிபதி அநுரவை இரு கரம் கூப்பி வணங்கியும் கேட்டு விட்டேன் என்கிறார் ரவிகரன் எம்.பி.



சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவை இரு கை கூப்பி கும்பிட்டும் கேட்டு விட்டோம், இனி எவ்வாறு கேட்பது என தெரியவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

சனிக்கிழமை தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற சிறைக் கைதிள் படுகொலை பொது நாள் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு ஆதங்கத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த வருடம் மார்கழி மாதம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இலங்கையர் தினம் கொண்டாடுவதற்காக தமிழரசு கட்சியை சேர்ந்த நான்கு பேரை கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி செயலகம் அழைத்திருந்தார்.


குறித்த கலந்துரையாடல் வேறாக இருந்தாலும் ஜனாதிபதியை சந்தித்தபோது இரு கரம் கூப்பி கேட்டோம். தமிழ் அரசியல் கைதிகளை விடுவியுங்கள். அதிலும் இலங்கையர் தினத்தில் விடுதலை செய்தால் சந்தோசமடைவோம் எனவும் கூறினோம் ஆனால் நடக்கவில்லை.

வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் தேசியம் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பேசி இருக்கிறோம்.

அது மட்டுமல்லாது ஜனாதிபதியை சந்திக்கும் சந்தர்ப்பங்களில் தவறாது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி இருக்கிறோம் ஆனால் நிறைவேறாத ஆசையாக இருந்து வருகிறது.

தற்போது சிறையில் 10 தமிழ் அரசியல் கைதிகள் இருக்கிறார்கள். அவர்களின் விபரம் அடங்கிய கோவையை குரலற்றவர்களின் குரல் அமைப்பு என்னிடமும் தந்துள்ளார்கள். என்னால் முயன்றவரை கிடைக்கும் சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியுடன் பேசி இருக்கிறேன்.

அகவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியிடம் இரு கரம் கூப்பி விடுவியுங்கள் என கேட்டு விட்டேன் வேறு எவ்வாறு கேட்பது என எனக்கு தெரியவில்லை என அவர் கவலையுடன் தெரிவித்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News



# தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு விழா

27-07-2026

26.07.2026 ஞாயிறு அன்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 3 தீர்மானங்களில் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களின் முழு உருவச்சிலையை பல்கலைக்கழகத்தின் முகப்பில் நிறுவவேண்டும் என்பதும் ஒன்றாகும்!

26.07.26 ஞாயிறு அன்று மாலையில் நடைபெற்ற பொது அரங்கத்திற்குத் தலைமை தாங்கிய உலகத் தமிழர் பேரமைப்பின் பொதுச் செயலாளர் திரு. ந.மு. தமிழ்மணி அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானங்களை முன்மொழிய அவையினர் அவற்றை கைதட்டி வரவேற்று நிறைவேற்றினர்.

**தீர்மானம்-1**

இந்தியாவிலேயே முதன்முதலாக மொழிக்கென்றே முதன்முதலில் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் தஞ்சையில் அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் தொடக்கிவைக்கப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தமிழறிஞர்களும், அந்தந்த நாடுகளின் பிரதிநிதிகளும், தமிழ்நாட்டின் மூத்த தமிழறிஞர்கள், அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள், இந்திய-தமிழக அமைச்சர்கள் மற்றும் இலட்சக்கணக்கான தமிழர்கள் கூடியிருந்து வாழ்த்த பெரும் கோலாகலத்துடன் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொடக்கவிழா சீரும் சிறப்புடனும் நடைபெற்றது.

தமிழுக்கென்று தனியானதொரு பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டும் என்ற தமிழர்களின் நீண்டகால விருப்பம் அன்று நிறைவேறியது. அதன் முதலாவது துணைவேந்தராக முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் பதவியேற்றார். அனைவரின் எதிர்ப்பார்ப்புக்கேற்ப இப்பல்கலைக்கழகத்தை உலகளாவிய ஒன்றாகவும், உயராய்வு மையமாகவும் திட்டமிட்டு வளர்த்தார். அறிவாற்றலும், திறமையும் மிக்கத் தமிழறிஞர்களைப் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுத்துப் பல்வேறு பொறுப்புகளில் அமர்த்தினார்.

இலக்கியம், இலக்கணம், வரலாறு, தொல்லியல், அறிவியல், அகராதியியல், சுவடியியல், சித்த மருத்துவயியல், நாட்டுப்புறவியல், சிற்பவியல் போன்ற 24 துறைகளை உருவாக்கி மிகத் தேர்ந்த பேராசிரியர்களை ஒவ்வொன்றுக்கும் தலைமைப் பொறுப்பில் அமர்த்தி சிறந்த உயராய்வுகளைத் தொடரச் செய்தார்.

உலக மொழிகளின் ஆய்வுகளில் நிலவிவரும் புதிய போக்குகளையும் நெறிகளையும் உணர்ந்து நமது மொழியின் ஆய்வுகளில் புதிய நெறி காண வழிகாட்டினார். அவர் பதவி வகித்த ஐந்தாண்டுக் காலத்திற்குரிய வேலைத் திட்டத்தை முன்னதாகவே திட்டமிட்டு, வகுத்து, அச்சிட்டு, பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய அனைவரிடமும் கொடுத்து அது நிறைவேற்றப்படுவதை ஒவ்வொரு கட்டத்திலும் கண்காணித்து எவ்விதக் குறையுமின்றி நிறைவேற வழிவகுத்தார்.

அனைத்துத் துறைகளிலும் தமிழ்க் கலைச்சொற்கள் உருவாக்கப்படவேண்டும் என்பதற்காகப் பலதுறைகளுக்கும் குழுக்களை உருவாக்கினார்.

சுருங்கக் கூறின் தஞ்சையில் நிறுவப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகமாக உயர்த்தவேண்டும் என்பதும், மிகச்சிறந்த உயராய்வுத் தமிழ் மையமாக உருவாக்கப்படவேண்டும் என்பதுமே அவரது குறிக்கோளாக இருந்தது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தன்னிலிருந்து வேறாக அவர் பார்த்ததில்லை. அவர் மறைந்த பிறகுகூட, அவரது சாம்பலை தமிழ்ப்பல்கலைக்கழக வளாகத்தில் தூவவேண்டும் என எழுதி வைத்துவிட்டுச் சென்ற ஒரு மாமனிதருக்கு அவரது இலட்சியக் கனவான தமிழ்ப் பல்கலைக்கழகம் அவர் விரும்பியவண்ணமே தொடர்ந்து இயக்கப்படவேண்டும். அதற்கானவற்றைத் தமிழக மக்களும் அரசும் செய்ய முன்வரவேண்டும்.

அம்மாமனிதரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் இவ்வேளையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அவர் விரும்பியவண்ணமும், அவர் வகுத்துக் கொடுத்தத் தடத்தில் தொடர்ந்து செல்ல உரியவற்றைக் குறித்து ஆராய்ந்து செயல்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள், ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் மற்றும் தமிழறிஞர்கள் கொண்ட ஒரு குழுவை அமைக்க முன்வருமாறு தமிழக அரசை இவ்விழாக்குழுவும், உலகத் தமிழர் பேரமைப்பும் வேண்டிக்கொள்கின்றன.


**தீர்மானம்: 2**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் பொறுப்பினை ஏற்று அனைவரும் போற்றும் வண்ணம் செயல்பட்டு அதை உருவாக்கிய சிற்பியான முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களின் முழு உருவச்சிலை ஒன்றினைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முகப்பில் நிறுவவேண்டும் என இவ்விழாக்குழுவும், உலகத் தமிழர் பேரமைப்பும் தமிழக அரசை வேண்டிக்கொள்கின்றன.

**தீர்மானம்: 3**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தினையும், அதன் கட்டடத்தையும் திட்டமிட்டு வடிவமைத்து ஆய்வாளர்களுக்குரிய உயர் நூலகமாக மிளிரச் செய்த முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களின் பெயரை நூலகத்திற்குச் சூட்டவேண்டும் என்று இவ்விழாக்குழுவும், உலகத் தமிழர் பேரமைப்பும் தமிழக அரசை வேண்டிக்கொள்கின்றன.

**அன்புள்ள,**



**(பழ. நெடுமாறன்) - தலைவர்**

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கறுப்பு யூலை நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது



கறுப்பு யூலை இனப்படுகொலை மற்றும் அதனோடுனைந்து வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி,தங்கத்துரை, ஜெகன் உள்ளிட்ட 53 அரசியல் கைதிகளையும் நினைவுகூறும் நிகழ்வு உணர்வுபூர்வமாக யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றது.

தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் காலை 10 மணிக்கு பிரதான ஈகைச்சுடரேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து உப தவிசாளர் தர்மலிங்கம் ஜனார்த்தனன் மற்றும் சபை உறுப்பினர்களால் வெலிக்கடை சிறையில் படுகொலை குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை உள்ளிட்ட அரசியல் கைதிகளின் அடையாளமாக 53 தீபங்கள் ஏற்றப்பட்டு அஞ்சலிக்கப்பட்டன. தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது.

தொடர்ந்து அஞ்சலி உரை இடம்பெற்றது. பிரதேச சபை உறுப்பினரும் முன்னாள் அரச சேவையாளருமான செல்வதிசைநாயகம் தவநாயகம் கறுப்பு யூலை தமிழர் வரலாற்றில் மாறாத வடு என்ற தலைப்பில் வரலாற்று உதாணங்களுடன் அஞ்சலியுரையாற்றினார். தொடர்ந்து சபை வளாகத்தில் கறுப்பு யூலை கோரத்தாண்டவத்தினை நினைவுகூர்ந்து புகைப்பட தொகுதி காட்சிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் மாநாடு அறிவார்ந்த போராட்ட வடிவமாகும் என்கிறார் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்



வலிந்து காணாமலாக்கப்பட்ட தாய்மார்களின் நீதிகோரிய போராட்டங்களுக்கு ஒத்துழைப்பது நியாயம் விரும்பும் சகலரினது கடமை என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 30 திகதி இடம்பெறவுள்ள சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தில் வடக்குக் கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்துவரும் மாநாடு தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் யாழ் டில்கோ விடுதியில் 27ம் திகதி அன்று திங்கட்கிழமை காலை நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், எமது மண்ணில் எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு நீதிவேண்டி நாம் போராடிவருகின்றோம். அப் போராட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் போராட்டம் சர்வதேச அளவில் எமது போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் அதேவேளை நீதிகோரிய போராட்டத்தினை இன்றும் உயிர்ப்புடன் வைத்திருக்கும் தியாகமாகவுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்படுவது என்பது சர்வதேச அளவில் மிகவும் கொடூரமான மனித உரிமை மீறலாகக் காணப்படுகின்றது. இலங்கையினைப் பொருத்தளவில் அரச இயந்திரம் ஆயிரக்கண தமிழர்களை வலிந்து காணாமலாக்கியுள்ளது. இதற்கு ஏராளமான சட்டரீதியிலான மற்றும் சாட்சிய ரீதியிலான ஆதாரங்கள் உள்ளன. ஆட்சி மாற்றங்கள் காலத்திற்குக் காலம் ஏற்பட்டபோதும் மாறிமாறி ஆட்சி பீடம் ஏறிய அரசாங்கங்கள் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் நீதியை வழங்கவில்லை. காணாமலாக்கப்பட்டோர் என்று யாரும் இல்லை என்று கூட பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கங்கள் கூறியிருப்பதை நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம். இப்போது ஆட்சியில் உள்ளவர்களும் காணாமல் போனோர் விடயத்தில் காலத்தினை கடத்துகின்றனரே தவிர ஆக்கபூர்வமாக எதையும் செய்யவில்லை.

சர்வதேச அளவில் உள்நாட்டுப் பொறிமுறைவாயிலாக தீர்வை முன்வைப்பதாக அரசாங்கங்கள் கூறிவருகின்றன. வலிந்து காணாமலாக்கப்படுவதன் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட பாரிய மனித உரிமைக் குற்றத்தினை மறைப்பதற்காக அரச பலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசு பணியாற்றிக்கொண்டிருக்கின்றது. திரட்டப்பட்டு வெளிவிவகார அமைச்சு வாயிலாகவும் இராஜதந்திரிகள் வாயிலாகவும் இது நிகழ்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்மார் மற்றும் பாதிக்கப்பட்டவர்களே தமக்காக மீளவும் மீளவும் குரல்கொடுக்கவும் போராடவும் வேண்டியுள்ளமை மிகவும் வேதனையானது.

இந் நிலையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அறிவுசார் போராட்ட முறைமைகளையும் உட்புகுத்துபவர்களாக மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்கின்றனர். இது வரவேற்கத்தக்க மேலுமொரு போராட்ட அணுகுமுறையாகும். அறிவார்ந்த உத்தியுமாகும். இவ்வாறான விடயங்களுக்கு நாம் தேசமாக ஒன்று திரண்டு துணை நிற்போம் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

உலக செய்திகள்
World News

# கறுப்பு ஜூலை நினைவேந்தல் மற்றும் செம்மணி படுகொலைகள் ஆகியவைக்கு சர்வதேச நீதியை கோரி இங்கிலாந்து பிரதமர் அலுவலகத்தின் முன்பாக கவனயீர்ப்பு




கறுப்பு ஜூலை மற்றும் செம்மணி படுகொலைக்கு சர்வதேச நீதியை கோரி இங்கிலாந்து பிரதமர் அலுவலகத்தின் முன்பு 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன வெறி வன்முறைகளில் உயிரிழந்தோர், காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை நினைவுகூரும் வகையிலும், செம்மணி படுகொலைக்கு சர்வதேச நீதியை கோரி கறுப்பு யூலை நினைவேந்தல் மற்றும் கவனயீர்ப்பு போராட்டம் இலங்கையில் தமிழர்கள் மீது திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலையை நினைவுகூர்ந்து, நீதியையும் பொறுப்புக் கூறலையும் வலியுறுத்தும் அமைதியான கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டம் தமிழீழ சுய நிர்ணய அமைப்பு (MSDTE), சர்வதேச நீதிக்கான தமிழீழ மக்கள் சங்கம் மற்றும் தமிழ் அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்தனர்.

இதன் போது குறித்த போராட்டத்தில் புலம்பெயர் தமிழர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

# இந்திய மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் தேர்வு சீர்திருத்த மசோதா நிறைவேறியது



குரல் வாக்கெடுப்பு மூலம் மக்களவையில் தேர்வு சீர்திருத்த மசோதா நிறைவேறியது. தேர்வு சீர்திருத்த மசோதா நிறைவேறிய பின்பு மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் பொதுத்தேர்வுகளில் முறைகேடுகளை தடுக்க வகை செய்யும் தேர்வு சீர்திருத்த மசோதா, 2026 மீது 29ம் திகதி மீண்டும் விவாதம் நடைபெற்றது. எனினும், டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது அடக்குமுறையை கையாண்ட விவகாரம் தொடர்பாகவும் மேகதாது விவகாரம் தொடர்பாகவும், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால், அவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் அவை 2 மணியளவில் கூடியது. இதில், குரல் வாக்கெடுப்பு மூலம் மக்களவையில் தேர்வு சீர்திருத்த மசோதா நிறைவேறியது. தேர்வு சீர்திருத்த மசோதா நிறைவேறிய பின்பு மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனால், ஒரு மாதத்திற்கும் மேலாக வினாத்தாள் கசிவுக்கு எதிராக நாடு முழுவதும் நடந்த போராட்டத்திற்கு ஒரு தெளிவான சட்ட ரீதியிலான பதில் கிடைத்து உள்ளது. இந்த மசோதா மாநிலங்களவையில் நாளை எடுத்து கொள்ளப்படும் என கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, வினாத்தாள் கசிவில் ஈடுபடும் தனிநபர்கள் கண்டறியப்பட்டால், அவருக்கு ரூ.50 லட்சம் அபராதத்துடன் 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும். வினாத்தாள் கசிவில் ஈடுபட கூடிய அமைப்புகள் கண்டறியப்பட்டால் ரூ.10 கோடி அபராதம் விதிக்கப்படும்.

# போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான 100 வார விழிப்புணர்வு பிரசாரத்தை ஆகஸ்ட் 2-ந்தேதி இந்திய பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்



இந்தியாவில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பயன்பாடு கவலை அளிப்பதாகவும், இதற்கு எதிராக நாடு முழுவதும் 100 வார விழிப்புணர்வு பிரசாரம் தொடங்க உள்ளதாகவும் மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். இந்த விழிப்புணர்வு பிரசாரத்தை வரும் ஆகஸ்ட் 2-ந்தேதி பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளார்.

“நஷா முக்தா யுவா பார் விக்சித் பாரத்” (வளர்ந்த இந்தியாவிற்கான போதைப்பழக்கம் இல்லாத இளைஞர்கள்) என்ற பெயரில் நடைபெறும் இந்த விழிப்புணர்வு பிரசாரத்தின் மூலம் போதைப்பொருள் இல்லாத இந்தியாவை கட்டியெழுப்ப நாட்டிலுள்ள இளைஞர்களை பிரதமர் மோடி ஊக்குவிப்பார் என்று மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். இதன் மூலம், போதைப்பொருள் இல்லாத சமூகம் என்ற செய்தியை எடுத்துரைப்பதற்காக, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைப்பயணங்கள், விளையாட்டு நடவடிக்கைகள், தியான கூட்டங்கள், தெருவோர நாடகங்கள் மற்றும் கலைப் போட்டிகளை நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகத்தின் 2025 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, நாடு முழுவதும் சுமார் 1.34 லட்சம் கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் சந்தை மதிப்பு சுமார் ரூ.1,980 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. அதே ஆண்டில், 42,282 ஏக்கர் பரப்பளவிலான சட்டவிரோத ஓபியம் சாகுபடி அழிக்கப்பட்டது. இது 2020-ல் 10,000 ஏக்கராக இருந்தது.

# மாற்றுத்திறனாளி சிறுமியின் நீண்டநாள் கனவை நனவாக்கிய நடிகை சிம்ரன்



நடிகை சிம்ரன், ஒரு கையுடன் பிறந்த 10 வயது மாற்றுத்திறனாளி சிறுமி நிஷாவின் நீண்டநாள் கனவை நனவாக்கி, அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளார். ஒரு கையுடன் பிறந்திருந்தாலும், அதை ஒரு தடையாக கருதாமல் தன்னம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் நடன பயிற்சியில் ஈடுபட்டு வந்தார் நிஷா. குறிப்பாக, நடிகை சிம்ரன் நடித்த பாடல்களுக்கு அவரை போலவே நடனமாடி, தனது திறமையை சமூக வலைதளங்களில் வெளிப்படுத்தி பலரின் கவனத்தை ஈர்த்தார்.

நிஷாவின் நடனத் திறமை மற்றும் வாழ்க்கைப் பயணத்தை தன்னார்வலர் ஆஷிக், நடிகை சிம்ரனிடம் எடுத்துரைத்தார். அப்போது, தினமும் பள்ளிக்கு செல்ல ஒரு புதிய சைக்கிள் வேண்டும் என்பது நிஷாவின் நீண்டநாள் ஆசை என்பதையும் தெரிவித்தார். இதையடுத்து, நிஷாவை நேரில் சந்திக்க சிம்ரன் அழைப்பு விடுத்தார். சந்திப்பின்போது, நிஷா நீண்ட நாட்களாக பயிற்சி செய்து வந்த சிம்ரனின் பாடலுக்கு அவருடனேயே இணைந்து நடனமாடினார்.

அதைத் தொடர்ந்து, நிஷாவின் நீண்டநாள் கனவாக இருந்த புதிய சைக்கிளை சிம்ரன் பரிசாக வழங்கி இன்ப அதிர்ச்சி அளித்தார். நிஷாவிடம் பேசிய சிம்ரன், முதலில் கல்வியில் முழு கவனம் செலுத்த வேண்டும் என்றும், அதே நேரத்தில் தனது கனவுகளை தன்னம்பிக்கையுடன் தொடர்ந்து பின்தொடர வேண்டும் என்றும் ஊக்கமளித்தார். சிம்ரனின் செயலுக்கு ரசிகர்களும் பொதுமக்களும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.



# அமெரிக்கா சென்றுள்ள இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவைச் சந்தித்து உரையாடினார் டொனால்டு டிரம்ப்

அமெரிக்காவின் போலி அதிபர் டொனால்டு டிரம்ப் உடன் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு சந்தித்து பேசினார். ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது.

மேலும், ஹர்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதனால், கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது. இதையடுத்து, இரு தரப்பு பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டது. ஆனால், ஹர்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் சரக்கு கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த 12ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது.

இதனால் இரு தரப்பும் இடையே மீண்டும் மோதல் வெடித்தது. ஈரான் மீது கடந்த 25ம் தேதி வரை தொடர்ந்து 13 நாட்களாக அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரான் பதிலடி கொடுத்தது. இதையடுத்து இரு தரப்பும் கடந்த 26ம் தேதி முதல் எந்த தாக்குதலையும் நடத்தவில்லை. இதனால் மத்திய கிழக்கில் அமைதி திரும்பியுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்கா சென்றுள்ளார். அவர் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப்பை சந்தித்தார். வெள்ளைமாளிகையில் இந்த சந்திப்பு நடைபெற்று வருகிறது. மத்திய கிழக்கில் நிலவி வரும் மோதல் சூழ்நிலை, ஈரான் போர், அடுத்தகட்ட நடவடிக்கை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தி வருகின்றனர். ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தியப்பின் இரு தலைவர்களும் நேரில் சந்திப்பது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட மாகாண சுகாதாரத் துறைக்கான சுகாதார உதவியாளர் ஆட்சேர்ப்பு நடவடிக்கை சீராக நிறைவேற்றப்பட வேண்டும் என ஆளுநர் நா.வேதநாயகன் வேண்டுகோள்!

பு. கஜிந்தன்

வடக்கு மாகாண சுகாதாரத் துறையின் எதிர்கால சேவைத் தரத்தை நிர்ணயிக்கும் சுகாதார உதவியாளர் ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது, எவ்வித அழுத்தங்களுக்கும் இடமளிக்காமல் அதியுயர் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமாகும், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார உதவியாளர் நியமனத்துக்காக நியமிக்கப் பட்டுள்ள நேர்முகத் தேர்வுக் குழு உறுப்பினர்களுடனான விசேட கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் 28ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது குழு உறுப்பினர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அதிகாரிகளுக்குத் தொடர்ந்தும் அறிவுறுத்தல்களை வழங்கிய ஆளுநர் மேலும் குறிப்பிட்டதாவது: 2019ஆம் ஆண்டில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டும் கடமையைப் பொறுப்பேற்க அனுமதிக்கப்படாத சுகாதார உதவியாளர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். இந்தப் பின்னனியையும், பொதுமக்களின் தீவிர அவதானிப்பிலும் இந்த விடயம் இருப்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

300 வெற்றிடங்களுக்காக சுமார் 3,550 விண்ணப்பதாரிகள் அழைக்கப் பட்டுள்ளனர். இதில் எழுத்துப் பரீட்சை எதுவும் இடம்பெறவில்லை என்பதால், நேர்முகத் தேர்வில் வழங்கப்படும் ஒவ்வொரு புள்ளியும் இறுதித் தெரிவை நேரடியாகப் பாதிக்கும். எனவே, நீங்கள் வழங்கும் ஒவ்வொரு புள்ளிக்கும் தெளிவான, நியாயமான மற்றும் ஆதாரபூர்வமான காரணம் இருக்க வேண்டும்.

நேர்முகத் தேர்வின்போது எந்தவொரு தனிப்பட்ட செல்வாக்குக்கும், அரசியல் அல்லது நிர்வாக அழுத்தத்துக்கும், வெளிப்புறத் தலையீட்டுக்கும் துளியளவும் இடமளிக்கக் கூடாது. தகுதி, திறமை மற்றும் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் மட்டுமே மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள 6 நேர்முகத் தேர்வுக் குழுக்களும் ஒரே மதிப்பீட்டு அளவுகோல்களையே பின்பற்ற வேண்டும். ஒரே தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு வெள்வேறு குழுக்களால் வெள்வேறு அணுகுமுறைகள் பின்பற்றப்படக் கூடாது.



அரசாங்க சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான ஒதுக்கீடு உள்ளிட்ட அனைத்து சட்டபூர்வ ஒதுக்கீடுகளும் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். முறைகேடு, பாரபட்சம் அல்லது அதிகாரத் துஷ்பிரயோகம் உறுதிப்படுத்தப்பட்டால், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக எந்தவிதப் பாகுபாடும் இன்றிச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், என ஆளுநர் கண்டிப்பாக எச்சரித்தார்.

இதேவேளை, எதிர்காலத்தில் சுகாதார உதவியாளர்களுக்கான சேவைப்பிரமாணக் குறிப்பு கட்டாயம் மாற்றியமைக்கப்பட்டு, இவ்வாறான ஆட்சேர்ப்புகளின்போது எழுத்துப் பரீட்சையும் உள்வாங்கப்பட வேண்டும் என ஆளுநர் இதன்போது விசேடமாகக் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், விளம்பரப்படுத்தப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாகவே புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகத் தேர்வின் போதான தொழிலுடன் தொடர்புடைய தொழில்நுட்பக் கேள்வி வங்கியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கையில் கூறப்பட்டவாறு மாற்றுத்திறனாளிகளுக்குரிய 3 சதவீத ஒதுக்கீடும் கட்டாயம் கவனத்தில் கொள்ளப்படும். அத்துடன், தெரிவு செய்யப்படுபவர்கள் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் அனைத்தினதும் உண்மைத்தன்மை, உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி உறுதி செய்யப்படும், எனக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண அரச சேவையின் நம்பகத்தன்மையையும் கௌரவத்தையும் பாதுகாக்கும் வகையில் சகலரும் நேர்மையாகச் செயற்பட வேண்டும் என ஆளுநர் மீளவும் வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்), சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், உதவிச் செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் நேர்முகத் தேர்வுக் குழுவினர் ஆகியோர் பங்கேற்றனர்.

# இலங்கையில் அரசாங்கமும் அரசியல்வாதிகளும் மாறியது போன்று அரச அதிகாரிகளும் மாற வேண்டும் என்கிறார் வடக்கின் ஆளுநர் வேதநாயகன்!



அரசாங்கம் மாறுவதால் மட்டும் முறைமை மாற்றம் முழுமையடையாது. அரசியல்வாதிகள் மாறியது போன்று, அதிகாரிகளும் மாறினால் மாத்திரமே மக்கள் எதிர்பார்த்த அந்த மாற்றம் மக்களின் வாசற்படியை எட்டும், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

"சட்டத்தை மதிக்கும் நேர்மைமிகு அரச சேவை" எனும் தொனிப்பொருளில் வடக்கு மாகாண நேர்மை வார (27 ஜூலை 2026 தொடக்கம் 31 ஜூலை 2026 வரை) அறிமுக நிகழ்வு, 27ம் திகதி அன்று திங்கட்கிழமை (27.07.2026) வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தில் நடைபெற்றது. இதன் பிரதான நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அரச அதிகாரிகள் மத்தியில் மிக விரிவாகவும் உணர்வுபூர்வமாகவும் உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

## மனச்சாட்சியை விழித்தெழச் செய்யும் உறுதிமொழி

நாம் இன்று இங்கு கூடியிருப்பது வெறும் ஒரு அரசாங்க நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்காகவோ, ஒரு உறுதிமொழியை உச்சரிப்பதற்காகவோ அல்ல. எமது மனச்சாட்சியை மீண்டும் ஒருமுறை விழித்தெழச் செய்வதற்காகவே இங்கு கூடியுள்ளோம். சில நிமிடங்களுக்கு முன்பு நாம் ஏற்றுக்கொண்ட உறுதிமொழி ஒரு நிர்வாக நடைமுறையல்ல. அது எமது பதவியை விட உயர்ந்த எமது மனச்சாட்சியின் முன்னால் நாம் நாமே எடுத்துக் கொண்ட புனித உறுதியாகும். இன்று ஒலித்த அந்த வார்த்தைகள், அலுவலக மேசைகளில் முடிவுகளாகவும், கோப்புகளில் நீதியாகவும், மக்களை அணுகும் எமது புன்னகையில் மனிதநேயமாகவும் மாற வேண்டும்.

## நேர்மையின் உண்மையான அர்த்தம்

நேர்மை என்பது பணம் வாங்காமை மட்டுமல்ல் ஊழல் செய்யாமையும் மட்டுமல்ல. எமக்காக ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை, எமக்காக அல்லாமல் மக்களுக்காகப் பயன்படுத்துவதே நேர்மையாகும். ஒரு ஏழை மனிதனின் கோப்பைக் காரணமின்றித் தாமதப்படுத்தாமல் இருப்பதும், பொது வளங்களைத் தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் இருப்பதும், தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர்களுக்கும் ஒரே அளவுகோலால் நீதி வழங்குவதுமே உண்மையான நேர்மையாகும். சட்டம் பார்க்காத இடத்திலும் மனச்சாட்சி பார்க்கிறது என்ற உணர்வோடு நாம் வாழ வேண்டும்.

## முறைமை மாற்றமும் அரச அதிகாரிகளும்

2022 ஆம் ஆண்டு இந்த நாடு அனுபவித்த "அரகலய" போராட்டத்தின் மையச் சொல் "முறைமை மாற்றம்" என்பதாகும். அந்த இரண்டு சொற்களில் ஒரு தலைமுறையின் கனவும், கோபமும், எதிர்பார்ப்பும் அடங்கியிருந்தது. 2024ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மாண்புமிகு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்கள் தெரிவு செய்யப்பட்டு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இன்று நேர்மையான நிர்வாகத்துக்கான அரசியல் விருப்பமும், அரசியல் தலைமைத்துவமும் உருவாகியுள்ளது. ஊழலுக்கு அரசியல் பாதுகாப்பு கிடைக்கக்கூடாது என்ற தெளிவான நிலைப்பாடு வந்துள்ளது. ஆனால், அரசியல் நேர்மையாக இருந்தும் நிர்வாகம் நேர்மையற்றதாக இருந்தால், மக்கள் எதிர்பார்த்த நல்லாட்சி மலராது. அரசியல்வாதிகள் மாறிவிட்டார்கள் என்று மட்டும் நாம் திருப்தியடைய முடியாது அதிகாரிகளும் மாற வேண்டும்.

## நேர்மையாளர்களைக் குறிவைக்கும் அவதூறுகள்

நேர்மையாக இருப்பவர்கள் சில நேரங்களில் தனிமையையும் மிரட்டல்களையும் சந்திப்பார்கள். நேர்மையான மனிதன், நேர்மையற்றவர்களின் சுகவாழ்க்கைக்கு ஒரு தடையாக மாறுவதாலேயே சமூக ஊடகங்களில் முகம் தெரியாத கணக்குகள் ஊடாக நேர்மையான அதிகாரிகளின் நற்பெயரைக் களங்கப்படுத்தும் முயற்சிகள் நடக்கின்றன. இது ஒரு தனிமனிதனை மட்டுமல்ல, நேர்மையையே தாக்கும் முயற்சியாகும். ஆனால், அவதூறுகளைக் கண்டும் அச்சுறுத்தல்களைக் கண்டும் அஞ்ச வேண்டாம். உங்களது இலக்கு மக்களின் நலனாக இருக்கட்டும். அன்று நேர்மையாக இருந்தமைக்காக ஓரங்கட்டப் பட்டவர்கள், தற்போதைய அரசாங்கத்தால் உரிய மரியாதைகளுடன் அமர்த்தப் படுகின்றார்கள்.

## மனச்சாட்சியின் நீதிமன்றமும் கர்மாவின் நியதியும்

நேர்மையிலிருந்து விலகும் பயணம் ஒரு சிறிய சமரசத்தில்தான் ஆரம்பிக்கின்றது. அலுவலகத்தில் அரசாங்கம் வழங்கிய ஒரு வெற்றுக் காகிதத்தைத் தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்துவதிலோ, ஒரு கோப்பை நியாயமின்றித் தாமதப்படுத்துவதிலோ அது ஆரம்பிக்கிறது. சாட்சிகள் இல்லாமையால் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பினாலும், மனச்சாட்சியின் நீதிமன்றத்திலிருந்து யாரும் தப்ப முடியாது. "விதைத்ததே விளையும்" என்பது இயற்கையின் மாறாத நியதியாகும். நேர்மையை விதைப்பவர் நம்பிக்கையை அறுவடை செய்வார் ஊழலை விதைப்பவர் அவமானத்தையே அறுவடை செய்வார்.

## இறுதி அழைப்பு

நீங்கள் இன்று எடுத்த உறுதியை, அரசாங்கம் கட்டாயப்படுத்தியதால் எடுத்ததாக எண்ணாதீர்கள் உங்கள் மனச்சாட்சியின் முன்னால் எந்த நாளிலும் தலைகுனியாமல் நிற்கும் வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதற்காக எடுத்த உறுதியாக எண்ணுங்கள். "உன்னைத் திருத்து, சமூகம் தானாகத் திருந்தும்" என்பதற்கிணங்க, இங்குள்ள அதிகாரிகளில் 50 சதவீதம் பேர் இன்று எடுத்த உறுதிமொழியின்படி நாளை முதல் வாழ்ந்தாலே, மக்கள் எதிர்பார்த்த முறைமை மாற்றம் வெகு தொலைவில் இருக்காது, எனத் தெரிவித்து ஆளுநர் தனது நீண்ட உரையை நிறைவு செய்தார்.

முன்னதாக வளாக முன்றலில் தேசியக் கொடி மற்றும் மாகாணக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் மற்றும் மாகாணக் கீதம் என்பன இசைக்கப்பட்டன. தொடர்ந்து நேர்மைக் கலாசாரம் தொடர்பான ஒலிப்பதிவு ஒலிக்கவிடப்பட்டது. அதன் பின்னர் நேர்மைக்கான சத்தியப்பிரமாணம் மற்றும் உறுதியுரை ஏற்கப்பட்டதுடன், மரநடுகை மற்றும் மரக்கன்று விநியோகமும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் வரவேற்புரையை நிகழ்த்தினார். மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் சிவகுருநாதன் திருவாகரன் நேர்மையான சேவை தொடர்பில் சிறப்புரையாற்றியதுடன், உதவிப் பிரதம செயலாளர் அனற் நிந்துஷா அன்ரனி டினேஷ் நன்றியுரையாற்றினார்.





# ஜோர்டான் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்திய ஈரான்

உலக செய்திகள் World News

ஜோர்டான் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், ஹர்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதனால், கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தது.

இதையடுத்து, இரு தரப்பு பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டது. ஆனால், ஹர்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் சரக்கு கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த 12ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதனால் இரு தரப்பும் இடையே மீண்டும் மோதல் வெடித்தது. ஈரான் மீது கடந்த 25ம் தேதி வரை தொடர்ந்து 13 நாட்களாக அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரான் பதிலடி கொடுத்தது. இதையடுத்து இரு தரப்பும் கடந்த 26ம் தேதி முதல் எந்த தாக்குதலையும் நடத்தவில்லை. இதனால் மத்திய கிழக்கில் அமைதி திரும்பி இருந்தது.

இந்நிலையில், ஈரான் மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளது. ஜோர்டான் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. ஜோர்டானில் உள்ள அமெரிக்க படைத்தளத்தை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது. அதேவேளை, ஈரான் ஏவிய ஏவுகணைகளை ஜோர்டான் வான்பாதுகாப்பு அமைப்பு நடுவானில் சுட்டு வீழ்த்தியது. ஈரானின் இந்த திடீர் தாக்குதலால் மத்திய கிழக்கில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# உக்ரைன் அருகே கருங்கடலில் தாக்குதலில் 13 இந்திய மாலுமிகள் சிக்கி தவிக்கின்றனர்

உக்ரைன் அருகே கருங்கடலில் தாக்குதலில் 13 இந்திய மாலுமிகள் சிக்கி தவிக்கிறது. ரஷ்யா-உக்ரைன் போர் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், கருங்கடல் பகுதியில் தொடர்ந்து டிரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. கருங்கடல் வழியாக செல்லக்கூடிய வணிக கப்பல்களும் தாக்குதலுக்கு உள்ளாகின்றன.

இந்த நிலையில், பலாவ் நாட்டுக் கொடியுடன் இயங்கும் எம்.வி. அமிர்-1 என்ற சரக்குக் கப்பல் உக்ரைனின் கருங்கடல் துறைமுகமான செர்னோமோர்ஸ்க் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் 13 இந்தியர்கள் உட்பட மொத்தம் 15 பேர் பணியாற்றி வருகின்றனர். துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்து டிரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் நடைபெறுவதால், கப்பலை பாதுகாப்பாக வெளியே கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மாலுமிகள் சங்கம் வெளியிட்டுள்ள காணொளியில், கப்பலைச் சுற்றியுள்ள பகுதியில் புகை மண்டலங்கள் எழுவதும், தாக்குதல்களின் சத்தம் கேட்பதும் பதிவாகியுள்ளது. இதனால் கப்பலில் உள்ள இந்தியர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து இந்திய மாலுமிகள் சங்கம், வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் கப்பல் போக்குவரத்து துறையினர் உடனடியாக தலையிட்டு, உக்ரைன் அதிகாரிகளுடன் இணைந்து 13 இந்திய மாலுமிகளையும் பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. இதற்கு முன்பு, உக்ரைனின் ஒடேசா துறைமுகம் அருகே நடந்த தாக்குதலில் இந்திய மாலுமிகள் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலை ஏற்படுத்தியிருந்தது. அந்த நிலையில், தற்போது மேலும் 13 இந்தியர்கள் போர்ப் பகுதியில் சிக்கியிருப்பது புதிய கவலையை ஏற்படுத்தியுள்ளது.

# பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் காவல்துறை துப்பாக்கி சூட்டில் 20 பேர் உயிரிழந்தனர்



பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் காவல்துறை துப்பாக்கி சூட்டில் 20 பேர் உயிரிழந்தனர். ஜம்மு-காஷ்மீரின் 35 சதவீத பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ளது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கு தனியே அதிபர், பிரதமர், சட்டசபை உள்ளது. இதனிடையே, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், விலைவாசி உயர்வு, அரசியல் உரிமைகள் பறிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளை முன்னிறுத்தி அவாமி நடவடிக்கை குழு என்ற மனித உரிமைகள் அமைப்பு அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வந்தது.

இந்த போராட்டங்களை ஒடுக்கும் நடவடிக்கையில் பாகிஸ்தான் ராணுவம் ஈடுபட்டு வருகிறது. இதனிடையே, ஆக்கிரமிப்பு காஷ்மீரில் சட்டசபைக்கு 53 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இதில் 45 பேர் தேர்தல் மூலமாக மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எஞ்சிய 8 இடங்கள் பெண்கள், தொழில்நுட்ப வல்லுனர், மதகுருக்கள் ஆகியோருக்கு ஒதுக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கான தேர்தல் 3 கட்டங்களாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, முதற்கட்டமாக மீர்பூர் பிரிவின் 13 தொகுதிகளுக்கும் நேற்று தேர்தல் நடைபெறவிருந்தது. ஆனால், தேர்தலை புறக்கணித்த மக்கள் அவாமி நடவடிக்கை குழு தலைமையில் ராவல்கட் நகரில் இருந்து முசாபர் நகருக்கு பேரணியாக செல்ல முயற்சித்தனர். அப்போது, ராவல்கட் நகரின் முக்கிய சாலையில் பேரணி சென்றபோது பொதுமக்கள் மீது காவல்துறை, பாதுகாப்புப்படையினர் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இந்த துப்பாக்கி சூட்டில் 20 பேர் உயிரிழந்தனர். மேலும், 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

கனடிய செய்திகள் Canadian News

## 'Greenborough Seniors Wellness Club' of Markham, hosted it's Annual Summer Park Party with Sports and Entertaining Activities.

# மார்க்கம் நகரில் செயற்படும் "Greenborough Seniors Wellness Club" நடத்திய "பூங்கா ஒன்றுகூடலும் பொழுது போக்கு நிகழ்வும்!






மார்க்கம் நகரில் திருமதி செல்வா அருள்ராஜசிங்கம் தலைமையில் சிறப்பாக செயற்படும் 'Greenborough Seniors Wellness Club' அமைப்பு நடத்திய "பூங்கா ஒன்றுகூடலும் பொழுது போக்கு நிகழ்வும்" கடந்த 20-07-2026 திங்கட்கிழமையன்று மார்க்கம் - ஸ்காபுறோ ஆகிய நகரங்களுக்கு இடையிலுள்ள "மிலிக்கன் பூங்கா"வில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் அமைப்பின் செயற்பாடுகளையும் அதன் தலைவரின் சிறந்த தலைமைத்துவத்தையும் பாராட்டி உரையாற்றிய பின்னர் தனது அலுவலகத்தின் சார்பான வாழ்த்துப் பத்திரத்தை திருமதி செல்வா அருள்ராஜசிங்கத்திடம் ஒப்படைத்தார்.

அங்கு அறிஞர் சாமி அப்பாத்துரை மற்றும் பொறியிலாளர் கிள்ளிவளவன் ஆகியோரும் உரையாற்றினார்கள். அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் பலரும் கலைஞர்களும் அங்கு கலந்து சிறப்பித்தார்கள்.

விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அத்துடன் மதியம் மற்றும் மாலை உணவு வகைகளை பரிமாறப்பெற்றன.

ஒட்டு மொத்தமாக அன்றைய ஒன்று கூடல் கலந்து கொண்ட அனைவரையும் மகிழ்வித்தது என்றால் அது மிகையாகாது.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*








# தமிழர்களும் விலங்குகளும்!

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

**ஒருபுறம் செம்மணியில் மனித குல நாகரீகத்திற்கு முரணாக, இன அழிப்பு என்றும் குற்றம் சாட்டத்தக்க விதத்தில் புதைக்கப்பட்ட மனிதர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்படும் ஒரு நாட்டில், இன்னொரு புறம், விலங்குகளை பாதுகாப்பதற்கு மிக விரிவான நுட்பமான ஏற்பாடுகளைக் கொண்ட ஒரு சட்டமூலம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இது புதுவை இரத்தினதுரை பல ஆண்டுகளுக்கு நுண் எழுதிய பின்வரும் கவிதை வரிகளை ஞாபகப்படுத்தவில்லையா?**

*"மான் சுட்டால் அன்றி*
*மரை சுட்டால், மயில் சுட்டால்*
*ஏன் என்று கேட்க இந்நாட்டில் சட்டமுண்டு*
*மாடடித்தல் கூட, மறைவான ஓரிடத்தில்*
*சாகடிக்க வேண்டுமெனச்*
*சட்டத்தில் இடமுண்டு.*
*கொக்குச் சுடுதல் குற்றம்*
*பயிரழித்து*
*திக்கெட்டும் நடந்து திரிகின்ற ஆனையினைச்*
*சுட்டால், அது குற்றம்*
*"சுதந்திர பூமியிலே"*
*சட்டம் இதற்கெல்லாம் தண்டிக்கும்*
*தண்டிக்க வேண்டியதே.*
*நாய்பிடிக்கக்கூட நகரசபைக்காரர்கள்*
*நீ பிடிக்கலாமென்று நியமனங்கள் செய்துள்ளார்*
*மானுக்கு,மாட்டுக்கு*
*மரையோடு, மயிலுக்கு*
*ஆனைக்குக்கூட அனுதாபப்படும் நாட்டில்*
*மனித உயிர் மட்டும் மலிவு*
*மிக மலிவு."*



46ஆவது ஜுலை இன அழிப்பு நினைவுகளை தமிழ் மக்கள் கடந்துபோகும் ஒரு காலப் பின்னணியில், ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேஷ தூதுக்குழு செம்மணிக்கு வருகை தந்த ஓர் அரசியல் சூழலில், செம்மணியில் அந்தத் தூதுக்குழு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு அறிந்திருக்கும் ஒரு பின்னணியில், செம்மணியில் மேலும் மேலும் கூடுகள் வந்தவண்ணம் உள்ளன.

இந்த எலும்புக்கூடுகளில் ஒன்று இருந்த நிலையில் காணப்பட்டது. இன்னொன்று மழைக்கு அணியும் ஜாக்கெட்டுடன் காணப்பட்டது. இவை எவற்றைக் காட்டுகின்றன என்றால், அங்கே மனிதர்களின் உடல்கள் உரிய மரியாதைகளோடு புதைக்கப்படவில்லை என்பதைத்தான்.

தமிழ் மக்களோ, சிங்கள மக்களோ, முஸ்லிம் மக்களோ, உடல்களைப் புதைக்கும் பொழுது இருந்த நிலையில் புதைப்பதில்லை. சமாதி அடைந்த சன்னியாசிகளைத்தான் இருந்த நிலையில் புதைப்பதுண்டு. மேலும் மழைக்கு அணியும் ஜாக்கெட்டுடன் பூத உடல்களை புதைப்பதில்லை. எந்த ஒரு மத நம்பிக்கையாக இருந்தாலும் அல்லது மத நம்பிக்கைகள் இல்லாத இறுதிச் சடங்குகளின் போதும் உடல்களுக்கு அவற்றுக்குரிய மரியாதை கொடுக்கப்படுவதே வழமை. உடல்களை அவற்றுக்குரிய மரியாதையான நிலையில் கிடத்தி, உறுப்புகளை நீட்டி நிமிர்த்தி ஒன்றில் எரிப்பார்கள் அல்லது புதைப்பார்கள்.

ஆனால் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் பெரும்பாலானவை அவ்வாறான மரியாதைகள் இன்றி புதைக்கப்பட்டிருக்கின்றன. அதுவே ஓர் இன அழிப்புதான். அதுவே ஒரு பண்பாட்டுப் போர்தான். அதைப் புதைத்தவர்களின் பண்பாட்டு வீழ்ச்சிதான்.

அதுமட்டுமல்ல, அது மனித குல நாகரிகத்தை அவமதிக்கும் ஒரு செயல். தமது சக மனிதரின் இறந்த உடலுக்கு அதாவது பூத உடலுக்கு மரியாதை கொடுப்பது, வணக்கம் செலுத்துவது என்பது மனிதர்களை ஏனைய விலங்குகளிடமிருந்து வித்தியாசப்படுத்தும் விடையங்களில் ஒன்று. விலங்குகள் ஒரு சகவிலங்கு இறந்தால் ஒன்றில் அவற்றை உணவாக்கிக் கொள்ளும். அல்லது அவற்றை அப்படியே கைவிட்டுச் செல்லும். இறந்த விலங்கின் உடல் புழுக்களுக்கும் பறவைகளுக்கும் இரையாகும்.

இறந்துபோன குட்டியின் உடலை தாய் விலங்கு சுற்றிசுற்றி வரக்கூடும். ஆனாலும் ஒரு கட்டத்தில் அது அதனை இயற்கையிடம் ஒப்படைத்துவிட்டு விலங்கு நகர்ந்து விடும். ஆனால் மனிதர்கள் இறந்த சக மனிதர்களை உரிய மரியாதை கொடுத்து புதைப்பார்கள். அல்லது தகனம் செய்வார்கள். சக மனிதரின் உடலுக்கு மரியாதை செய்வது என்பது மனித நாகரீகத்தின் தொடக்கப் புள்ளிகளில் ஒன்று.

ஆனால் செம்மணியில் பெரும்பாலான எலும்புக்கூடுகளை பொறுத்தவரை, அந்த நாகரீகம் பின்பற்றப்படவில்லை. மனிதர்கள் நாகரீகமாகப் புதைக்கப்படவில்லை. எந்த ஒரு மத நம்பிக்கையின் அடிப்படையிலும் அங்கே உடல் அடக்கம் செய்யப்படவில்லை என்பதைத்தான் அங்கு கிடைக்கும் எலும்புக்கூடுகள் நமக்கு உணர்த்துகின்றன.

இறந்த அல்லது கொல்லப்பட்டவர்களின் உடல்களை அவற்றுக்குரிய மரியாதையைக் கொடுக்காமல் புதைப்பது அல்லது எரிப்பது என்பது இன அழிப்பின் ஒரு பகுதிதான். செம்மணியில் எடுக்கப்படும் எலும்புக்கூடுகள் இன அழிப்பின் ஆகப்பிந்திய சாட்சியங்களா?

இவ்வாறு செம்மணியில் உடல்கள் தாறுமாறாக எந்த மரியாதையுமின்றி மனித குல நாகரீக வளர்ச்சிகளுக்கு முரணாக, கண்டபடி புதைக்கப்பட்டிருப்பது வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில், இலங்கை அரசாங்கம் விலங்குகளை நேசித்தல், அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் விலங்குகளுக்கு எதிரான கொடுமைகளைத் தடுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய சட்டக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் புதிய விலங்கு நலச் சட்டமூலத்தை சமர்ப்பித்துள்ளது.

2026 ஜுலை 17ஆம் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள இந்தச் சட்டமூலத்தின் மூலம், விலங்குகள் மீது கருணை, தயவு மற்றும் சரியான கவனத்தைச் செலுத்துதல், அத்துடன் அவற்றின் பாதுகாப்பு, நலன் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கான புதிய சட்ட விதிகளை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இச்சட்டமூலத்தின்படி விலங்குகளைப் பாதுகாப்பதற்கு பின்வரும் விடயப் பரப்புகளில் கவனம் செலுத்தப்படும்.

முதலாவதாக, விலங்கு நலன் என்பது விலங்குகளைத் தாக்காமல் இருப்பதுடன் மட்டுமல்ல. அவற்றுக்குத் தேவையான உணவு,சுத்தமான நீர் மற்றும் பொருத்தமான இருப்பிடத்தை வழங்குவதும் விலங்கு நலனின் அடிப்படை அம்சங்களாகக் கருதப்படுகின்றன. அதற்கமைய, விலங்குகளுக்கு உணவோ அல்லது நீரோ வழங்காதிருத்தல், அவற்றுக்குரிய இருப்பிடத்தை வழங்காதிருத்தல், அளவுக்கு அதிகமாக வேலை வாங்குதல், தகுதியற்ற விலங்குகளை வேலைக்கு ஈடுபடுத்துதல் அல்லது ஏனைய செயற்பாடுகள் அல்லது செய்யத் தவறுதல்கள் மூலம் தேவையற்ற வலி அல்லது துன்பத்தை ஏற்படுத்துவதைத் தடை செய்ய இச்சட்டமூலம் முன்மொழிகிறது.

இரண்டாவதாக, விலங்குகளுக்கு வேண்டுமென்றே செய்யப்படும் கொடூரச் செயல்கள் மட்டுமன்றி, அவற்றை உரிய விதத்தில் பராமரிக்காமல் விடுவதையும் சட்டப்படி குற்றமாக்கும் விதத்தில் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, விலங்குகளைக் கொடுமைப்படுத்துவது தொடர்பாகக் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவருக்கு ரூபா 250,000 இற்கு மிகையாத அபராதம் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத சிறைத்தண்டனை அல்லது இவ்விரண்டு தண்டனைகளும் விதிக்கப்படலாம்.

மூன்றாவதாக, விலங்கொன்றைக் கொடூரமான முறையில் கொல்வது தொடர்பாகக் குற்றவாளியாகும் ஒருவருக்கு ரூபா 500,000 இற்கு குறையாத அபராதம் அல்லது மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது இவ்விரண்டு தண்டனைகளும் விதிக்கப்படலாம் என்றும் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாலாவதாக, செல்லப்பிராணிகளை வளர்த்துவிட்டுப் பின்னர் அவற்றைக் கைவிடுவது தொடர்பிலும் புதிய சட்டமூலம் கவனம் செலுத்தியுள்ளது. நோயுற்ற அல்லது ஊனமுற்ற விலங்குகளைப் பொது இடங்களில் இறக்க விடுவது, விலங்குகளைக் கைவிடுவது மற்றும் அவற்றுக்குத் தேவையான சிகிச்சைகள் கிடைக்காமல் விடுவது போன்ற செயல்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் விதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஐந்தாவதாக, சட்டவிரோதமான முறையில் விலங்குகளைக் கருத்தடை செய்தல் மற்றும் தகுதியற்ற நபர்களால் விலங்குகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தல் தொடர்பிலும் புதிய சட்டமூலம் கவனம் செலுத்தியுள்ளது.

ஆறாவதாக, விலங்குகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் சண்டைகள், விலங்குகளுக்குக் காயம் அல்லது மரணத்தை ஏற்படுத்தும் வேட்டை விளையாட்டுகள் மற்றும் விலங்குகளுக்கு இடையேயான சண்டைகளை நடத்துதல் போன்ற செயற்பாடுகளும் புதிய சட்டங்களின் கீழ் தடை செய்ய முன்மொழியப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், அதற்காக வசதிகளைச் செய்து கொடுத்தல் அல்லது விளம்பரம் செய்தல் என்பனவும் குற்றமாகக் கருதப்படவுள்ளது.

ஏழாவதாக, விலங்குகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லும்போது அவற்றுக்குத் தேவையற்ற வலி, துன்பம், காயம் அல்லது விபத்து ஏற்படாதவாறு செயற்பட வேண்டும் என்ற புதிய நிபந்தனைகளை அறிமுகப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது. அவ்விதிகளை மீறும் நபர்களுக்கு ரூபா 300,000 இற்கு குறையாத அபராதம் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மிகையாத சிறைத்தண்டனை அல்லது இவ்விரண்டு தண்டனைகளும் விதிக்கப்படலாம்.

எட்டாவதாக, செல்லப்பிராணி விற்பனை நிலையங்களுக்கு மற்றும் செல்லப்பிராணிகளைப் பெருகச் செய்யும் (இனப்பெருக்க) நிலையங்களுக்கு அனுமதிப் பத்திர முறைமையை அறிமுகப்படுத்தவும் புதிய சட்டமூலம் முன்மொழிகிறது. இதன்மூலம் விலங்கு வர்த்தகம் மற்றும் இனப்பெருக்கம் தொடர்பான செயற்பாடுகளை முறைப்படுத்தும் வாய்ப்புப் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கண்ட அம்சங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருக்கும் சட்டமூலத்தின் விதிகளைப் பரிசீலித்து பொருத்தமான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக, 2025 டிசம்பர் 29 ஆம் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு சமர்ப்பித்த பரிந்துரைகளின் அடிப்படையில் விலங்கு நலன் தொடர்பான இறுதிச் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு 2026 மே 18ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சட்ட வரைஞருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்கமைய, சட்ட வரைஞரால் விலங்கு நலச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குச் சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைத்துள்ளது. அதனைத் தொடர்ந்து,குறித்த சட்ட மூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிட்ட பின்னர் ஒப்புதலுக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

***இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் பெட்டிக்குள் காணப்பெறும் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதையை மீண்டும் ஒரு தடவை படித்துப் பாருங்கள்! அப்போது இந்த கட்டுரையின் உட்பொருள் விளங்கும்.***

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்-ரொறன்ரோ

## SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO

3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3



## ஆடி அமாவாசை
## பிதிர்தர்ப்பண மோட்ச சாந்தி வழிபாடு
## 11.08.2026 செவ்வாய்க்கிழமை

**ஆடி அமாவாசை தினத்தில் இறைபதம் அடைந்த நம் முன்னோர்களை நினைந்து, பிதிர்தோஷங்கள் நீங்க பிதிர் தர்ப்பணம் செய்து மோட்ச தீபம் ஏற்றி மோட்ச சாந்தி வழிபாடு செய்வது சிறந்தது.**

ஆடிஅமாவாசை விரத தினத்தை முன்னிட்டு காலை 7:45 மணி முதல் கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதப் பெருமானுக்கு விஷேட அபிஷேகம், 10:00 மணிக்கு விஷேட பூஜை, தொடர்ந்து வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**காலை 7:00 மணிமுதல் 1:00 மணிவரை ஆலயத்தில் பிதிர்தர்ப்பண மோட்ச சாந்தி வழிபாடுகள் செய்யலாம். அடியார்களின் காலதாமதத்தைத் தவிர்க்கப் பல சிவாச்சார்யர்களை ஆலயம் ஒழுங்கு செய்துள்ளது.**



## ஆடிப்பூரம் 14.08.2026 வெள்ளிக்கிழமை
## அம்பாளுக்கு நடைபெறும் ருதுசாந்திப் பெருவிழா

ருதுசாந்திப் பெருவிழாவில் நாகபூஷண கருமாரி அம்பாளுக்கு காலை 6:30 மணிமுதல் கும்பபூஜை, திரவிய அபிஷேகம் கணபதி ஹோமம், துர்க்காசூக்த ஸ்ரீசூக்த ஹோமம் நடைபெற்று மூலிகைகள், வாசனைத்-திரவியங்கள், நவரத்தினங்கள், பஞ்சலோகங்கள், வாசனை மலர்கள், மூலிகை வேர்வகைகள், மூலிகை இலைகள் நிறைந்த 108 கலசங்கள் பூஜை செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்தவரும் ஒவ்வொரு கலசம் (குடம்) ஏந்தி வீதிவலமாக வந்து ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்மனுக்கு ருதுசாந்தி - மங்கள நீராட்டு விழா நடைபெறும்.

மாலை 5:00மணிமுதல் விஷேட பூஜையும், 6:00 மணிக்கு வசந்த மண்டபத்தில் ருதுசாந்திப் பெருவிழா 64 விதமான (சதுஸ்சஷ்டி) உபசாரங்களும் சமர்ப்பித்து விஷேட வழிபாடுகள் நடைபெறு அன்னை சிவலிங்க பூஜை வடிவினளாக கைலாச வாகனத்தில் வீதிவலம்வரும் அருட்காட்சியும் நடைபெறும்.

## 21.08.2026 வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம்
## சுமங்கலி பூஜையும் திருவிளக்குப் பூஜையும்



காலை 7:30 மணிமுதல் வரலட்சுமி விரத தினத்தை முன்னிட்டு ஸ்ரீ மகாலட்சுமிக்கு 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், சப்பறத் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்மனுக்கு நவகலச அபிஷேகமும் விஷேட பூஜைகளும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5:00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், தொடர்ந்து சுமங்கலிப் பிரார்த்தனையும் திருவிளக்குப் பூஜையும், தொடர்ந்து 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், வரலட்சுமி விரத நூல் கட்டுதல் என்பன நடைபெறும்.

**திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.**

## ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்பாள் அலங்கார உற்சவம்
## 14.08.2028 வெள்ளி முதல் 23.08.2026 ஞாயிறு வரை



**மாணவர்கள் கல்வி, கலைகளில் சிறப்படையவும், வயோதிபர்கள் தேகதிட ஆரோக்கியம் பெறவும், திருமண வயதில் உள்ளவர்கள் திருமணபாக்கியம் பெறவும், குடும்பத்தில் பிரிவினைகள், சச்சரவுகள் நீங்கி குடும்ப அன்னியோனியம் பெற்று சந்தோசத்துடன் வாழவும். தம்பதிகள் சந்தான பாக்கியம் (குழந்தைச் செல்வம்) பெறவும். நோய், துன்பங்களில் அல்லல்படுவோர் ஆரோக்கியம் பெறவும். உலக அமைதி சமாதானத்துடன், தாயகத்தில் நிரந்தர அமைதியும் சுபீட்சமும் பெறவும். அனைவரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று மகிழ்வான வாழ்வு வாழவும் வேண்டி 10 தினமும் மாலை 6:40 மணிக்கு நடைபெறும் விசேட ஹோமம் மற்றும் அடியார்கள் பங்குகொள்ளும் குங்கும அர்ச்சனை ஆகியவற்றில் பங்கு பற்றி இறையருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.**

**கைலாச வாகனக்காட்சி**
**14.08.2026 வெள்ளி**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப

**சப்பற அலங்காரக் காட்சி**
**21.08.2026 வெள்ளி**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப

**தேர் அலங்காரக் காட்சி**
**22.08.2026 சனிக்கிழமை**
காலை 8:30 மணிக்கு வசந்தமண்டப

416.291.8500 vinaayagar.com vinaayagar

ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty

LIBERAL

AHSANUL HAFIZ

THE CANDIDATE FOR YOU IN SCARBOROUGH SOUTHWEST

ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.

டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.

அஹ்சானுல் ஹாஃபிஸ்
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்

*Authorized by the Scarborough Southwest Riding Association



மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்
ஆடிப்பூர கஞ்சிக்கலச சிறப்பு பூசை

குருவடி சரணம்

திருவடி சரணம்

மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும்
மேல்மருவத்துர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

11-08-2026 அன்று கடைசி ஆடிச் செவ்வாய்க்கிழமை
அத்துடன் காலை ஆடிஅமாவாசை சிறப்பு பூசையுடன் தந்தையின்
நினைவுநாளை முன்னிட்டு உரிய முறையில் விரதம் இருந்து வருகின்ற
பக்தர்கள் மனதில் "லட்சுமிகரம்" வந்து சேரும் என்கிறார் அன்னை.
சிறப்பான முறையில் மகேஷ்வரபூசையும் நடைபெறும்.
14-08-2026 வெள்ளி ஆடிப்பூர வழிபாடு.
16-08-2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி முதல் ஆடிப்பூர
கஞ்சிக்கலச சிறப்பு பூசைகள் நடைபெற்று 11:00 மணியளவில்
கஞ்சிக்கலசம் வீதிவலம் நடைபெற்று சிறப்பு ஆராதனை நடைபெற்று
மகேஸ்வர பூசையுடன் முடிவடையும்.
அனைத்து சக்திகளையும்
அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
ஆடிப்பூரகஞ்சி எடுப்பவர்கள் முன்கூட்டியே அறிவித்தும்
பதிவுசெய்யலாம்.
அன்னைக்கு வேண்டிய பூ, தேசிக்காய் மற்றும்
பூசைப்பொருட்கள் வாங்கிக் கொடுத்து
அன்னையின் ஆசியைப் பெற்றுக்கொள்ளலாம்.
21-08-2026 வெள்ளிக்கிழமை மாலை வரலஷ்மி பூசை சிறப்பான
முறையில் நடைபெறும் அனைவரும் பங்குபற்றி அன்னையின்
அருளாசியைப் பெற்றுக்கொள்ளவும்.
தொண்டு செய்பவர்களும் பங்குபற்றலாம்.






80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647


கனடா-பிரம்ரன் அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
ஆடிவேல் விழா 2026
25வது வருடமாக நடைபெறும்
தங்கரதப் பெருவிழா
எதிர்வரும் குரோதி வருஷம் August மாதம் 6,7,8ம் திகதிகளில் 25வது தடவையாக நடைபெறுகின்ற ஆடிவேல் பெருவிழா திருவருள் கைகூடியுள்ளது.
3 தினங்கள் 6,7,8ம் திகதிகளில் முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் விஷேட தீபாரா தனைகளும் பக்தி பூர்வமாக இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும் . 3வது நாளாகிய 8ம் திகதி சனிக்கிழமை மாலை 5:00 மணிக்கு முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் தொடர்ந்து திருவூஞ்சலில் எழுந்தருளி விஷேட தீபாரா தனையும் சண்முக அர்சனையும் , சுப்பசிங்கர் கலைஞர்களும் மற்றும் கனேடிய கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கின்ற நிகழ்வுகளும், மயில்நாட்டிய உபசாரத்தோடும் 20 க்கு மேற்பட்ட இலங்கை இந்திய நாதஸ்வர தவில் இசையோடு அழகிய மின்விளக்குகளினால் அலங்கரிக்கப் பட்ட தங்கரதத்தில் வீதி உலா வந்து வடக்கு வீதியில் சிறுவர்களை கொள்ளை கொள்ளும் வாண வேடிக்கைகளோடும் சண்முகப் பொருமான் பிராயச்சித்த அபிஷேகத்தோடு ஆடிவேல் பெருவிழா பூர்த்தியாகும். அனைவரும் கலந்து கொண்டு சண்முகப் பெருமானின் நல்லருள் பெற்று உய்வீர்களாக.
200 Advance Blvd, Brampton, ON L6T 4V4 | Tel: (905) 458-9701 | (416) 471-0255
www.srikatpagavinayagar.ca | www.srikatpagavinayagar.com
இங்ஙனம் தேவஸ்தான தர்மகர்த்தா கணுக சிவத்தொண்டன் இரா விஜயநாதன்

# இலங்கை அரசு கடைப்பிடிக்கும் கசப்பான கொள்கை எது தெரியுமா?

## தனது பாதுகாப்பில் உள்ள கைதிகள் கொலை செய்யப்படும்போது, அவர்களுக்காக நீதியைக் கோரும் குரலின் உரப்பானது, அவர்களின் மொழியையும் இனத்தையும் வைத்தே தீர்மானிக்கப்படுகிறது!



*"அரசொன்றின் பாதுகாப்பில் இருக்கும் கைதிகள் படுகொலை செய்யப்படும்போது, அவர்களுக்கு நீதி கோரும் குரலின் உரப்பு, அவர்களின் மொழியையும் இனத்தையும் வைத்தே தீர்மானிக்கப்படுகிறது என்பதுதான் இலங்கையின் கசப்பான உண்மை. தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டபோதெல்லாம் மௌனத்தையே ஆயுதமாக ஏந்திய அன்றைய எதிர்க்கட்சிகள், சிங்களக் கைதிகளின் மரணத்தின்போது மட்டும் நீதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்து மனித உரிமைகள் என குரல் எழுப்புவது ஏன்?" - பாலா எழுதுகின்றார்*

---

**த**மிழ் அரசியல் கைதிகள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டபோது, அன்றைய நீதி அமைச்சர்களின் அதிகாரத்தைக் கேள்வி கேட்கத் தவறிய சிங்கள எதிர்க்கட்சிகள் இன்று சிங்களக் கைதிகளின் மரணத்தின்போது மட்டும் தற்போதைய நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்துள்ளன. இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதியும், இனம் சார்ந்த மனித உரிமை அக்கறையும் இலங்கை அரசியலின் இனவாத முகத்தை முகத்தை மீண்டும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இலங்கையின் பாராளுமன்றத்தில், பிரதமர்கள், சபாநாயகர்கள், மற்றும் சுகாதாரம், மின்சக்தி, சுற்றுலா போன்ற பிற துறை அமைச்சர்களுக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு வாக்கெடுப்புகள் நடந்து அவை தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக நீதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக எதிர்க்கிகளினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை அரசாங்கத்தினால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக கடந்த 24 ஆம் திகதி எதிர்க்கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையே விவாதத்திற்கு எடுக்கப்பட்ட நிலையில் 116 மேலதிக வாக்குகளினால் அரசினால் தோற்கடிக்கப்பட்டது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 36 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் எதிராக 152வாக்குகள் அளிக்கப்பட்ட தாலேயே 116 மேலதிக வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது.

2026 ஜூலை 5 மற்றும் 6 ஆகிய இரு தினங்களில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் உட்பட கைதிகள் சிலர் உயிரிழந்ததுடன், மேலும் சிலர் பலத்த காயமடைந்துள்ளனர். இதன் போது விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தனது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியதாக குற்றஞ்சாட்டி எதிர்க்கட்சியினரால் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டது.

இதேவேளை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக கடந்த 24 ஆம் திகதி எதிர்க்கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பி-ரேரணை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பிரதான கேள்வியை எழுப்பியுள்ளது அதாவது இலங்கை சிறைகளில் தமிழர்கள் படுகொலைசெய்யப்படும் போது தமது பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றும் நீதி அமைச்சர்கள் சிறைகளில் சிங்களவர்கள் கொல்லப்படும்போது மட்டும்தானா பொறுப்பை நிறைவேற்றாமல் செயற்படுகின்றார்களா என்பதே அந்தக் கேள்வி.

2026 ஜூலை 5 மற்றும் 6 ஆகிய இரு தினங்களில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், கைதிகள் உட்பட 32 பேர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் பலத்த காயமடைந்தனர் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் சிங்களவர்கள். இந்த சம்பவம் தொடர்பிலேயே நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

கொழும்பில் 1983 ஜூலை 24 ஆம் திகதி தமிழ்மக்களுக்கு எதிரான இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதில் 3000 க்கும் மேற்பட்ட தமிழர் படுகொலை செய்யப்பட்டனர். இதன்போது 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை வெலிக்கடை அதியுயர் பாதுகாப்பு சிறையிலிருந்த சிங்களக் கைதிகள், சிறைக்காவலர்களின் துணையோடு தமிழ் அரசியல் கைதிகள் மீது திட்டமிட்ட கொடூர தாக்குதல்களை நடத்தி தமிழ் மக்களின் போராட்ட இயக்கங்களின் தலைவர்களாகவிருந்த குட்டிமணி, தங்கத்துரை உட்ப 53 தமிழர்களை கொடூரமாகக் கொன்றனர். அப்போதைய ஆட்சியாளர் ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா. நீதி அமைச்சர் நிஸ்ஸங்க விஜயரத்ன.

12-12-1997 இல் களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியற் கைதிகள் அதே சிறைச்சாலையில் சிறை வைக்கப்படிருந்த சிங்களக் கைதிகளினால் வெட்டிக் கொல்லப்பட்டனர். இப்படுகொலை நடந்த வேளையில் சிறை அதிகாரிகள் சிங்களக்கைதிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அவர்களே தமிழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் ஆ னு சிறையின் கதவை சிங்களக்கைதிகளுக்கு திறந்து விட்டு உதவினர். அப்போதைய ஆட்சியாளர் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க. நீதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ்.

25-10-2000 அன்று மத்திய மாகாணத்தில் பண்டாரவளையில் இருந்த பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 27 பேர் சிங்களக் காடையர் கும்பலினால் வெட்டியும் குத்தியும் அடித்தும் எரித்தும் படு கொலைசெய்யப்பட்டனர். படுகொலைகள் இடம்பெற்ற பொழுது பாதுகாப்பிற்கென நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் அதனைத் தடுப்பதற்கு எந்த வித முயற்சியும் எடுக்கவில்லை.அப்போதைய ஆட்சியாளர் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்க.நீதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ்.

ஆக. வெலிக்கடை, களுத்துறை, பிந்துனுவெவ சிறைகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகள் படுகொலைசெய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் அப்போது நீதி அமைச்சர்களாகவிருந்த நிஸ்ஸங்க விஜயரத்ன, ஜி.எல். பீரிஸ் ஆகியோருக்கு எதிராக தமிழ் கைதிகளைப் பாதுகாக்காது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறி விட்டனர் என்று குற்றம்சாட்டி அப்போதைய எதிர்கட்சிகளாகவிருந்த யாருமே நமிபிக்கையில்லாப் பிரேரணைகளை கொண்டுவரவில்லை. இதில் 1983 வெலிக்கடை சிறைச்சாலையில் 53 தமிழ்க்கைதிகள் படுகொலைசெய்யப்பட்டபோது பிரதமராகவிருந்தவர் ரணசிங்க பிரேமதாச. இவர் தற்போதைய நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்த எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசாவின் தந்தையாவார்.

இத்தனைக்கும் வெலிக்கடை, களுத்துறை, பிந்துனுவெவ சிறைகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகள் போதைப்பொருள் குற்றங்களிலோ. பாதாள உலகக்குழு செயற்பாடுகளிலோ ஈடுபட்டவர்கள் அல்ல. தமிழ் மக்களுக்காக உரிமைகள் கோரிப் போராடியவர்கள். ஆனால் அண்மையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் கொல்லப்பட்ட கைதிகள் போதைப்பொருள் குற்றங்களில், பாதாள உலகக்குழு செயற்பாடுகளிள் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளுக்குள்ளானவர்கள்.

இலங்கை சிறைச்சாலைகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களும் படுகொலைகளும் வெறும் சட்ட ஒழுங்கு சார்ந்த பிரச்சினைகள் மட்டுமல்ல. அவை நாட்டின் அரசியல் காய்நகர்த்தல்களோடும் இனரீதியான பாகுபாடுகளோடும் பிணைக்கப்பட்டுள்ளன என்பதையே தற்போதைய நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவுக்கு எதிரான எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாப்பிரேரணை தெளிவுபடுத்துகின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டபோது மௌனம் காத்த சிங்கள எதிர்க்கட்சிகள், சிங்களக் கைதிகளின் மரணத்தின் போது மட்டும் நீதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்தமையானது அவர்களின் நீதிக்கான குரல் "இன ரீதியானது" என்பதைத் தோலுரித்துக் காட்டுகிறது.



அரசொன்றின் காவலின்கீழ் உள்ள மனிதர்களின் உயிர்களுக்குக்கூட இனம் பார்த்து மதிப்புக்கூட்டும் இந்த இரட்டை நிலைப்பாடு, நாட்டின் ஜனநாயகம் எந்தளவுக்குப் பலவீன-மாக உள்ளது என்பதற்குச் சிறந்த சான்றாகும். தமிழ் கைதிகள் படுகொலை செய்யப்பட்டபோது கண்டுகொள்ளாத எதிர்க்கட்சிகள், சிங்களக் கைதிகளின் மரணத்தின்போது மட்டும் காட்டிய இந்த அவசரம் மற்றும் ஆக்ரோஷம் நீதிக்கான தேடல் அல்ல. அது அப்பட்டமான இனவாத அரசியல் காய்நகர்த்தலே.

---

## வீணாவின் கவிக்கணை

வெறும் காகிதம்,
அதில் நீ வரைந்தால்
ஓவியம்,
எழுதினால் காவியம்,
அதையே கிழித்து
எறிந்தால் குப்பை,
அதுபோலத்தான்
உன் வாழ்க்கை,
அதை திறம்பட
சிந்தித்து செதுக்கிடு
நீயே ❤




# இலங்கையில் "டெங்கு" நோயின் விஸ்வரூபம் 83 ஆயிரத்தைக் கடந்த நோயாளர்களாய் உயர்ந்தது

இலங்கை செய்திகள் Sri Lanka News

## 175 பகுதிகள் அதிஅபாய மண்டலங்களாகவும் பிரகடனம்

- ந.லோகதயாளன்

இலங்கையில் நடப்பு ஆண்டில் இதுவரை பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகின்றது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு கவலை வெளியிட்டுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் புதிய தரவுகளின்படி, நாடு முழுவதிலும் இருந்து இதுவரை 83 ஆயிரத்து 661 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், டெங்குக் காய்ச்சலின் தீவிர தாக்கத்தினால் இதுவரை 61 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அங்கு இதுவரை 17 ஆயிரத்து 779 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாகக் கொழும்பு மாவட்டத்தில் 16 ஆயிரத்து 665 நோயாளர்கள் கண்டறியப்பட்டு இரண்டாம் இடத்தில் உள்ளது.

டெங்கு நோயால் மேல் மாகாணம் தொடர்ந்து பெரும் பாதிப்பைச் சந்தித்து வருகின்றது. மேல் மாகாணத்தில் மட்டும் இதுவரை 44 ஆயிரத்து 359 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், அதற்கு அடுத்தபடியாகத் தென் மாகாணத்தில் 12 ஆயிரத்து 586 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கை முழுவதும் டெங்கு நோய் வேகமாகப் பரவி வரும் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, நாடு முழுவதும் 175 பகுதிகள் “அதிஅபாய மண்டலங்களாக“ சுகாதாரத் துறையினரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, பொதுமக்கள் தங்கள் வீடுகளையும் சுற்றாடலையும் சுத்தமாகப் பேணுவதுடன், நீர் தேங்கும் இடங்களை அகற்றி கொசு உற்பத்தியைக் கட்டுப்படுத்த விழிப்புடன் செயற்படுமாறு சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மட்டக்களப்பில் 20 வருடமாக அடிப்படை வசதி இல்லாத மீனவ கிராமத்து மக்களின் அவலங்களை போக்கும்படி ஜனாதிபதியிடம் கோரிக்கை

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு பாலமீன்மடு மீனவர் எழுச்சி கிராமம் 50 வீட்டுத் திட்டத்தில் 30 குடும்பங்கள் அடிப்படை வசதிகளான மலசல கூடம், குடிநீர், மின்சாரம் இல்லாமல் கடந்த 20 வருடமாக வாழ்ந்து வரும் மக்களின் அவலங்களை போக்குமாறு ஜனாதிபதி மற்றும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருக்கு அவசரமாக கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக ஈ.பி.டி.பி கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பாலைமீன் மடுவில் உள்ள அவரது காரியாலயத்தில் 29ம் திகதி அன்று புதன்கிழமை இடம்பெற்ற வாராந்த ஊடக மாநாட்டில் ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மீனவர் எழுச்சி கிராமம் 50 வீட்டுத்திட்டம் கடந்த 2000 ம் ஆண்டு உருவாக்கி குடியேற்றப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிலையில் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தினால் இந்த வீட்டுத்திட்டம் பாதிக்கப்பட்டதையடுத்து ஒரு சிலருக்கு மாற்று காணிகள் வழங்கப்பட்டு சுவிஸ் கிராமத்தில் குடியேற்றப்பட்டனர்.

அதன் பின்னர் 2006ம் ஆண்டு பாதிக்கப்பட்ட மீனவர் கிராமத்தில் ஒரு சிலர் குடியேறி தொடர்ந்து 30 குடும்பங்கள் இன்று வரையும் வாழ்ந்து வருகின்றனர் இவர்களுக்கான காணி ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த மீனவர் எழுச்சி கிராமாக அமைக்கப்பட்ட அந்த காணியில் உல்லாச விடுதி ஒன்று நிர்மாணிப்பதற்காக 2014ம் ஆண்டு அப்போது இருந்த பிரதேச செயலாளர் ஒரு தனிநபருக்கு குத்தகைக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அனுமதி வழங்கப்பட்டு இருந்தது.

இதன்போது பாலைமீன் மடுவில் உள்ள பொது நல அமைப்புகள் ஆலய நிர்வாகம் அதற்கு எதிர்த்து அதனை தடை செய்ய வேண்டும் என அப்போது இருந்த ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து 2015ம் ஆண்டு அனுமதி வழங்கிய பிரதேச செயலாளரால் அது இரத்து செய்யப்பட்டது.

இன்று அந்த மக்களுக்கு காணி ஆவணங்கள் வழங்காமல் இது அனர்த்த வலயமாக அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே அந்த இடம் ஹோட்டல் கட்ட அப்போது அனர்த்த வலயம் இல்லை அனுமதி வழங்குகிறார்கள் அந்த ஊரிலே பிறந்த காணி இல்லாத மக்கள் குடியிருப்பது அனர்த்த வலயமா?

எனவே ஹோட்டலுக்கு வழங்கப்பட்ட காணியை ரத்து செய்ததன் காரணத்தினால் அந்த மக்களை பழி தீர்ப்பதற்கு அனர்த்த வலயமாக பிரகடனப்படுத்தி அப்போதைய பிரதேச செயலாளர் மோசடி ஒன்றை செய்துள்ளார்.

இருந்தபோதும் இந்த மீனவர் எழுச்சி கிராமமானது கடலில் இருந்து 120 மீற்றருக்கு அப்பால் இருக்கிறது இவர்கள் அடிப்படை வசதிகளான குடிநீர் மலசல கூடம் மின்சாரம் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர் இவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் அந்த அடிப்படை வசதிகளை செய்துதர முன்வந்தாலும் அவர்களுக்கு காணி அனுமதி பத்திரம் இல்லாத போதும் அதற்கான அனுமதியை கிராம சேவகர் உத்தியோகத்தரிடம் கோரினால் அதற்கு அவர் அனுமதி வழங்க மறுத்து வருகிறார்.



எனவே அப்போது இருந்த பிரதேச செயலாளர் தவராசா இது அனர்த்த வலயமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இது முற்றிலும் தவறான மோசடியானது என இப்போது உள்ள அரசாங்க அதிபரிடம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.



ஆகவே நீண்ட காலமாக குடியிருக்கும் இந்த 30 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்குங்கள் அல்லது மாற்றுக் காணிகளை வழங்குங்கள்.

புதிய அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு அருகில் எத்தனையே பேர் அரச காணிகளை சட்டத்திற்கு முரணான முறையில் காணிகளை கையகப்படுத்தி அதனை விற்பனை செய்யும் ஒரு தொழிலாக செய்து வருகின்றனர்.

ஏழைகள் காணி இல்லை என 10 சே் காணியை அடைத்தால் சட்டம் வெகு வேகமாக அவர்கள் மீது பாயும் அதே நேரத்தில் சண்டியர்களும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் பணபலம் படைத்தவர்கள் காணிகளை அடாத்தாக பிடித்து விற்பனை செய்யும் போது சட்டங்கள் அவர்களுக்கு எதிராக பாய்வது மிகவும் குறைவு எனவே பணக்காரர்களுக்கு ஒரு சட்டமும் ஏழைகளுக்கு ஒரு சட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இது வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த கிராமத்தை பூர்வீகமாக பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு ஒரு குடும்பத்தில் 3 பெண் பிள்ளைகள் இருந்தும் அவர்கள் மூத்த பிள்ளைக்கு அவர்களது வீட்டை கொடுத்து விட்டு அங்கே ஒரு வீட்டுக்குள் 3 குடும்பங்களும் அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாநகரத்தை ஆசியாவில் பேசும் பொருளாக நினைக்க வேண்டும் என்ற நீங்கள் நகரில் இருந்து 6 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மாதிரி மீனவர் கிராமத்தில் மலசல கூடம் இன்றி பெண்களும் ஆண்களும் தங்கள் காலை கடனை நிறைவேற்றுவதற்காக சவுக்கு காட்டிற்குள் சென்று பல சிரமங்கள் மத்தியில் நிறைவேற்றி வருகின்றனர் இது தானா? உங்கள் மட்டக்களப்பை ஆசியாவில் பேசும் பொருளாக மாற்ற திட்டமிட்டுள்ளீர்கள்.

முதலிலே மக்களுடைய அடிப்படை தேவைகள் என்ன என்பதை அறிந்து அதனை நிறைவேற்றுங்கள் அப்போது தான் மட்டக்களப்பு ஆசியாவில் மட்டுமல்ல ஐரோப்பாவிலும் பேசும் பொருளாகும்.

இந்த மக்கள் இரும்பு பரல்களில் கிணறு அமைத்து அதில் இருந்து தண்ணீரை எடுத்து தான் குடிக்கின்றனர். இது ஒரு மோசமான மனிதாபிமானமற்ற செயல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளே இரும்பு பெரலில் பதித்த குடிநீரை உங்களால் ஒரு நாள் குடிக்க முடியுமா?

எனவே மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் கேட்டுக் கொள்வது இந்த மக்களின் அவல நிலையை போக்குவதற்காக உடனடியாக கள விஜயம் மேற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்கவும்.

மாவட்டதிலுள்ள அரசியல்வாதிகள் மக்களின் நலனில் அக்கறை கொள்வதில்லை அவர்கள் தேர்தல் காலம் வரும்போது இறப்பு வீடுகள் ஆலயங்கள், திருமண வீடுகளுக்கு செல்வார்கள்.

அதேபோன்று தேர்தல் வரும் போது இந்த அரசியல்வாதிகள் கிராமங்களை தேடி அலை அலையாக வருவார்கள் தேர்தல் முடிந்த பின்னர் அந்த மக்கள் இருக்கிறார்களா? என நினைத்து பார்க்க மாட்டார்கள் எனவே குடிநீர் அற்று இருக்கின்ற அந்த கிராமத்துக்கு மட்டு மாநகர சபை ஒரு தண்ணீர் பரல் ஒன்றை வைத்து சுத்தமான குடிநீரை வழங்க முன்வர வேண்டும் என்பதுடன் இந்த மக்கள் நலனில் கருத்தாக ஈ.பி.டி.பி இருக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது உன்னிப்பாக கவனிக்கும் என்றர்.

# காத்தான்குடியில் வீடு நிர்மாண பணியின் போது தூண் இடிந்து விழுந்ததில் கட்டிட தொழிலாளி ஒருவர் உயிரிழப்பு

காத்தான்குடி பிரதேசத்தில் வீடு ஒன்று நிர்மாண பணியின்போது தூண் இடிந்து வீழ்ந்ததில் 28 வயதுடைய கட்டிடத் தொழிலாளியான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் 29ம் திகதி அன்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு ஜெயந்திபுரம், யாட் வீதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காத்தான்குடி நூரானியா மையவாடி முதலாம் குறுக்கு வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய வீடொன்றில் சம்பவ தினமான இன்று பிற்பகல் கட்டிட தொழிலாளி கட்டுமானப் பணியினை மேற்கொண்டு வந்த போது தூண் இடிந்து அவர் மீது விழுந்ததில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு நீதிமன்ற அனுமதியை பெற்று பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையில் நீதியரசர்களின் ஓய்வு வயதை நீடிக்க அமைச்சரவை வழங்கிய அனுமதி அநுர அரசின் தீவிர நகர்வு காட்டுகின்றதா?



இலங்கை உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை இரண்டு வருடங்கள் நீடிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசின் அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் 27ம் திகதி அன்று திங்கட்கிழமை நடைபெற்றபோதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 107 (5) பிரிவின்படி, உயர்நீதிமன்ற நீதியரசரின் தற்போதைய ஓய்வு வயது 65 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய முன்மொழிவின்படி அது 67 ஆண்டுகளாக நீடிக்கப்படவுள்ளது. அதே பிரிவின் கீழ், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு வயது 63 ஆண்டுகளில் இருந்து 65 ஆண்டுகளாகவும் உயர்த்தப்படவுள்ளது.

எதிர்க்கட்சிகளும் சட்டத்துறை சார் அமைப்புகளும் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற போதிலும், அரசு நீதியரசர்களின் பதவிக்காலத்தை நீடிக்கும் திட்டத்தில் தீவிரமாக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# "நேர்மையான கலாசாரம், தூய்மையான இலங்கை" என்ற தேசிய செயற்திட்டத்தின் மாவட்ட நடைபவனி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது!






"நேர்மையான கலாசாரம் - தூய்மையான இலங்கை" தேசிய செயற்திட்டத்தின் மாவட்ட நடைபவனி 28ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று (28.07.2026) காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலிருந்தும், ஆளுநர் செயலகத்திலிருந்தும் சமநேரத்தில் ஆரம்பமாகியது.

இந் நடைபவனியில் - மாவட்டச் செயலகத்திலிருந்து மாவட்டச செயலக உத்தியோகத்தர்கள், அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவைகள் மன்றத்தினர், பொலிஸ் மற்றும் முப்படையினரும், அதேவேளை கெளரவ ஆளுநர் செயகத்திலிருந்து ஆளுநர் செயலகம், பிரதம செயலாளர் செயலகம், மாகாண அமைச்சு மற்றும் மாகாண திணைக்கள உத்தியோகத்தர்களும் பங்குபற்றினார்கள்.

இவ் நடைபவனியில் வடமாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகன், பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசு, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், பிரதிப் பிரதம செயலாளர், மாகாண அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் திரு.எஸ் கபிலன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

மேலும், இந் நடைபவனி மாவட்டச் செயலகத்தின் முன்பாக ஆரம்பமாகி - வைத்தியசாலை வீதி ஊடாக வேம்படி சந்தியை அடைந்து, அங்கிருந்து முதலாம் குறுக்குத் தெரு வழியாக பிரதான வீதியைச் சென்றடைந்து, பஸ்ரியான் சந்தி மற்றும் கண்டி வீதி ஊடாக மீண்டும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் ஆளுநர் செயலகத்தை காலை 10.00 மணியளவில் வந்தடைந்தது குறிப்பிடத்தக்கது.

# 29ம் திகதிபுதன்கிழமை அன்று கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறவுள்ள சமகால அரசியல் உரையரங்கு



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் தொடர்பான உரையரங்கு நடைபெறவுள்ளது. இவ்வுரையரங்கு 29ம் திகதி அன்று புதன்கிழமை மாலை 3.00 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரை கொக்குவில் பொற்பதி வீதியில், பொற்பதிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள "அறிவாலயம்" மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வுரையரங்கில் "அரசியல் தீர்வு - எதிர்நோக்கும் சவால்கள்" என்ற தலைப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினதும், தமிழ்த் தேசியப் பேரவையினதும் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்ற உள்ளார். "கறுப்பு ஜீலை - கற்க மறந்த பாடங்கள்" என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும், "செம்மணிப் புதைகுழிகள் - உயிர்த்தெழும் சாட்சியங்கள்" என்ற தலைப்பில் அரசியற் செயற்பாட்டாளர் சுஜீவன் தர்மரட்ணமும் உரையாற்ற உள்ளனர்.

# "செம்மணிப் பேரவலத்துக்கு, இந்தியப்படையினரா, இலங்கை ஆயுதப்படைகளா அன்றி விடுதலைப்புலிகளா காரணம் என்பது விசாரணைகளின் இறுதியில் தெரியவரும்"

## உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்கின்றார் இலங்கையின் நீதி அமைச்சர் ஹர்ஷண



யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார உறுதியளித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "செம்மணிப் பேரவலத்துக்குத் தமிழீழ விடுதலைப்புலிகளா, இந்திய அமைதிப்படையினரா அல்லது இலங்கை ஆயுதப்படைகளா காரணம் என்பது தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளின் இறுதியிலேயே முழுமையாகத் தெரியவரும்." - என்றார்.

# கொழும்பில் ஆடி வேல் ஊர்வலத்தைச் சிறப்பித்த இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய!



கொழும்பு, செட்டித்தெரு மற்றும் பம்பலப்பிட்டி நகரத்தார் ஸ்ரீ புதிய கதிரேசன் கோயிலின் வருடாந்த ஆடி வேல் ஊர்வலம் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலையில் அலரி மாளிகைக்கு முன்பாக வருகை தந்தது. இதன்போது வேல் ஊர்வலத்துக்குப் பிரதமர் அலுவலகத்தின் சார்பாகப் பூஜை வழிபாடுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொண்டார்.

அலரி மாளிகையிலிருந்து பாரம்பரிய மேளவாத்தியங்கள் முழங்கப் பிரதமர் வேல் இரதத்தின் முன்பாக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு வேல் இரதத்தில் எழுந்தருளியிருந்த முருகப்பெருமானின் திருவுருவச் சிலைக்குப் பிரதமர் பழத்தட்டைப் பூஜையாகச் சமர்ப்பித்து, சமய வழிபாடுகளில் ஈடுபட்டுத் தெய்வ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.




அதனைத் தொடர்ந்து, வேல் ஊர்வல ஏற்பாட்டுக் குழுவினர் பிரதமரின் இந்தப் பங்கேற்பைப் பாராட்டும் வகையில் அவருக்கு மாலை அணிவித்துப் பொன்னாடை போர்த்தித் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர்.

கொழும்பு, செட்டித்தெரு மற்றும் பம்பலப்பிட்டி நகரத்தார் ஸ்ரீ புதிய கதிரேசன் கோயிலினால் வருடாந்தம் நடத்தப்படும் 152 ஆவது வேல் ஊர்வலமே இம்முறை நடைபெறுகின்றது. இந்த வருடாந்த ஆடி வேல் மகோற்சவமும் இரதோற்சவ விழாவும் 1874 ஆம் ஆண்டு முதல் இதுவரை தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு ஏன் இன்னும் கிடைக்கவில்லை?

## 1948-ல் தொடங்காத இலங்கையின் இனப்பிரச்சினையின் உண்மையான வரலாற்றைத் தேடி




**1948-ஐ மட்டும் பார்த்தால் இலங்கையின் முழு வரலாற்றையும் புரிந்துகொள்ள முடியுமா?**

இலங்கையின் இனப்பிரச்சினை மற்றும் அரசியலமைப்புச் சிக்கல் குறித்து எழுதப்படும் பல ஆய்வுகள் 1948 ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தமது ஆய்வைத் தொடங்குகின்றன.

1948 முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனை என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால், இலங்கையின் இன்றைய அரசியல் மற்றும் இனப்பிரச்சினையை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், வரலாற்றை 1948 ஆம் ஆண்டில் இருந்து மட்டும் தொடங்குவது போதுமானதல்ல.

ஏனெனில், 1948 ஆம் ஆண்டில் உருவான அரசியலமைப்பு அமைப்பு அந்த ஆண்டில் திடீரென உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. அதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாக இடம்பெற்ற அரசியல் மாற்றங்கள், ஐரோப்பிய காலனித்துவ ஆட்சி, நிர்வாக மையப்படுத்தல் மற்றும் பல்வேறு வரலாற்று அரசியல் அமைப்புகளின் மாற்றம் ஆகியவற்றின் விளைவாகவே நவீன இலங்கை அரசு உருவானது.

எனவே, இலங்கையின் இன்றைய பிரச்சினையை உண்மையாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், 1948-ஐத் தாண்டி அதன் நீண்ட வரலாற்றை ஆராய வேண்டிய அவசியம் உள்ளது.

### ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்பு இலங்கை எப்படி இருந்தது?

ஐரோப்பிய காலனித்துவத்திற்கு முன்னர் இலங்கைத் தீவில் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு அரசியல் அமைப்புகளும் ஆட்சிமுறைகளும் இருந்தன.

சிங்கள அரசியல் மரபுகளுடன் தொடர்புடைய இராச்சியங்களும், தமிழர் அரசியல் வரலாற்றுடன் தொடர்புடைய யாழ்ப்பாண இராச்சியமும் தீவின் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றன.

அதேவேளை, தீவின் அரசியல் எல்லைகளும் ஆட்சிமுறைகளும் காலத்திற்குக் காலம் மாறியுள்ளன. எனவே, இலங்கையின் வரலாற்றை ஒரே தொடர்ச்சியான அரசின் வரலாறாக மட்டும் பார்ப்பது சரியானதல்ல.

ஆனால், ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்னரே தீவின் பல பகுதிகளில் தனித்துவமான அரசியல் மற்றும் நிர்வாக மரபுகள் இருந்தன என்பது முக்கியமான வரலாற்று உண்மையாகும்.

### காலனித்துவ ஆட்சி தீவை எவ்வாறு மாற்றியது?

**போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பின்னர் பிரித்தானியர் ஆட்சிகள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின.**

1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியமும் பிரித்தானிய ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர், தீவின் பல்வேறு பகுதிகள் ஒரே காலனித்துவ நிர்வாகத்தின் கீழ் வந்தன.

பிரித்தானியர்கள் மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பை உருவாக்கினர். இதன் மூலம் முன்னர் வேறுபட்ட அரசியல் மற்றும் நிர்வாக மரபுகளைக் கொண்டிருந்த பகுதிகள் ஒரே நிர்வாக அமைப்புக்குள் இணைக்கப்பட்டன.

இதிலிருந்து ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது:

**காலனித்துவ ஆட்சியால் உருவாக்கப்பட்ட இந்த மையப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பே 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பின்னரும் தொடர்ந்ததா?**

இந்தக் கேள்வி இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றில் ஆழமாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

### 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றபோது உண்மையில் என்ன நடந்தது?

1948 ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது.

ஆனால், சுதந்திரத்தின் போது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட நிர்வாக எல்லைகளும் மையப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பும் பெருமளவில் தொடர்ந்தன.

அதாவது, காலனித்துவத்திற்கு முன்னர் இருந்த தனித்தனி அரசியல் அமைப்புகள் மீண்டும் தனித்தனி அரசியல் இறையாண்மை கொண்ட அமைப்புகளாக உருவாக்கப்படவில்லை.

மாறாக, பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டிருந்த முழுத் தீவின் நிர்வாக அமைப்புக்கே சுதந்திரம் வழங்கப்பட்டது.

இதன் மூலம் ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது.

**1948 ஆம் ஆண்டு சுதந்திரம் என்பது காலனித்துவ ஆட்சியின் முடிவா?**

அல்லது,

**காலனித்துவ ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புக்கு புதிய பெயரில் அதிகாரம் மாற்றப்பட்டதா?**

இந்தக் கேள்விக்கு வரலாற்றாசிரியர்கள், அரசியலமைப்புச் சட்ட ஆய்வாளர்கள் மற்றும் சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

இது ஒரு அரசியல் கோரிக்கையை ஆதரிப்பதற்காக மட்டுமல்ல.

மாறாக, இலங்கை என்ற நவீன அரசின் அரசியலமைப்பு எவ்வாறு உருவானது என்பதைப் புரிந்துகொள்வதற்காகவும் இந்தக் கேள்வி ஆராயப்பட வேண்டும்.

### சுதந்திரத்திற்குப் பிறகு இனப்பிரச்சினை ஏன் தீவிரமடைந்தது?

சுதந்திரத்திற்குப் பிறகு குடியுரிமைச் சட்டங்கள், மொழிக் கொள்கைகள், அரசியலமைப்பு மாற்றங்கள், பெரும்பான்மை மைய அரசியல் மற்றும் தொடர்ச்சியான இன வன்முறைகள் ஆகியவை தமிழ்-சிங்கள உறவுகளை மோசமாக்கின.

தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையிலான நம்பிக்கை குறைந்தது.

பல அரசியல் ஒப்பந்தங்களும் தீர்வுத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவற்றில் பல நடைமுறைப்படுத்தப்படவில்லை அல்லது நீடித்த தீர்வாக மாறவில்லை.

இறுதியில், அரசியல் பிரச்சினை ஆயுத மோதலாக மாறியது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்தாலும், அரசியல் பிரச்சினை முழுமையாக முடிவுக்கு வரவில்லை.

### 2009 ஆம் ஆண்டு போர் முடிந்தது ஆனால் பிரச்சினை முடிந்ததா?

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் காணாமல் போனவர்கள், மனித உரிமைகள், நிலம், இராணுவப் பிரசன்னம், மொழி உரிமைகள், அரசியல் அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் போன்ற கேள்விகள் தொடர்ந்து விவாதிக்கப்படுகின்றன.

இதனால் ஒரு முக்கியமான உண்மை வெளிப்படுகிறது:

**போர் முடிவடைவது மட்டும் உண்மையான அமைதியை உருவாக்காது.**

நீதி, சமத்துவம், அரசியல் உரிமைகள் மற்றும் அனைத்து மக்களும் பாதுகாப்பாக வாழும் நிலை உருவாகும்போதுதான் உண்மையான நல்லிணக்கம் உருவாகும்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் போதுமான தீர்வா?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

சிலர் இதனை அதிகாரப் பகிர்வுக்கான முக்கியமான ஏற்பாடாகக் கருதுகின்றனர்.

மற்றவர்கள், இது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற போதுமானதல்ல என்று கருதுகின்றனர்.

எனவே, கேள்வி வெறுமனே **"மாகாணங்களுக்கு எவ்வளவு அதிகாரம் வழங்க வேண்டும்?"** என்பதாக மட்டும் இருக்கக்கூடாது.

அதற்கு அப்பால்,

**"மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையிலான அதிகார உறவு எவ்வாறு இருக்க வேண்டும்?"**

என்ற ஆழமான கேள்வியையும் ஆராய வேண்டும்.

கூட்டாட்சி, பிராந்திய சுயாட்சி, அதிகாரப் பகிர்வு மற்றும் சுயநிர்ணயம் போன்ற பல்வேறு அரசியலமைப்பு முறைகள் குறித்து திறந்த மனதுடன் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

### தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை குறித்து ஏன் விவாதிக்க வேண்டும்?

சுயநிர்ணய உரிமை என்பது சர்வதேச அரசியலிலும் சர்வதேச சட்டத்திலும் முக்கியமான கொள்கையாகும்.

ஆனால் சுயநிர்ணயம் என்றால் கட்டாயமாக ஒரு தனிநாடு உருவாக வேண்டும் என்று பொருள் கொள்ள முடியாது.

சுயநிர்ணயம் பல்வேறு வடிவங்களில் வெளிப்படலாம்.

அது சமமான அரசியல் பங்கேற்பாக இருக்கலாம்.

பிராந்திய சுயாட்சியாக இருக்கலாம்.

கூட்டாட்சி அமைப்பாக இருக்கலாம்.

அதிகாரப் பகிர்வு முறையாக இருக்கலாம்.

வேறு அரசியலமைப்பு ஏற்பாடாகவும் இருக்கலாம்.

எனவே, சுயநிர்ணயம் மற்றும் பிரிவினை ஆகிய இரண்டையும் ஒரே பொருளாகக் கருதுவது சரியானதல்ல.

இலங்கையைப் பொறுத்தவரையில் முக்கியமான கேள்வி இதுதான்:

**தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஒருங்கிணைந்த இலங்கை அரசுக்குள் உண்மையான அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் சுயாட்சியின் மூலம் நிறைவேற்ற முடியுமா?**

அல்லது,

**பல தசாப்தங்களாகத் தொடர்ந்து தோல்வியடைந்த அரசியல் தீர்வுகளுக்குப் பின்னர், வேறு அரசியலமைப்பு வடிவங்களையும் ஆராய வேண்டுமா?**

இந்தக் கேள்விகள் அனைத்தும் திறந்த மனதுடன் கல்வியியல் ரீதியாக ஆராயப்பட வேண்டும்.

*(தொடர்ச்சி 19 பக்கம்)*

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் மாவட்டத்தில் "சிசு செரிய" மாணவர்களுக்கான பேருந்து சேவை ஆரம்பம்

மன்னார் நிருபர் 28-07-2026

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையை மேலும் திறம்படச் செய்யும் நோக்கில், மன்னார் மாவட்டத்தில் "சிசு செரிய" (Sisu Sariya) பேருந்து சேவை 28ம் திகதி அன்று கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்திற்காக முதன்முறையாக இச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது டன், மன்னாரிலிருந்து தலைமன்னார் வரை பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காக முதலாவது "சிசு செரிய" பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "சிசு செரிய" திட்டத்தின் கீழ், வடக்கு மாகாணத்தின் சில மாவட்டங்களுக்கு பேருந்துகள் ஈடுபடுத்தப் பட்டிருக்கவில்லை.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின்



தலைமீட்டின் பேரில், 20 பேருந்துகளை ஈடுபடுத்தி "சிசு செரிய" திட்டத்தின் முதற்கட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட குறித்த சேவைக்கு மன்னார் மாவட்ட தனியார் பேருந்து சங்கத்தின் பேருந்து ஒன்றே பயன்படுத்தப்பட்டுள்ளது.



இங்கு கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர், "சிசு செரிய" திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 20 வருடங்கள் கடந்துள்ள போதிலும், மன்னார் மாவட்ட மாணவர்கள் பல வருடங்களாக பாடசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்து சேவைகள் இன்றி பெரும் சிரமத்திற்கு உள்ளாகி இருந்தனர்.

அத்துடன், கடந்த கால அரசாங்கங்கள் வடபகுதி மாணவர்களைப் புறக்கணித்துச் செயற்பட்டுள்ளமை இதன் மூலம் தெளிவாகிறது.

இச் சேவையின் கீழ் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து சாதாரண கட்டணத்தில் பாதி மட்டுமே அறவிடப்படும் என்பதுடன், மீதித் தொகையை அரசாங்கம் பொறுப்பேற்கும்.

இதன் மூலம் கல்விக்காக பயணிப்போருக்கு கணிசமான நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஜெகதீஸ்வரன், மன்னார் மாவட்ட அரச அதிபர் கே. கனகேஸ்வரன், வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் எஸ். விமலேஸ்வரன், மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தர்மலிங்கம் ரமேஷ் உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள்,பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற தெய்வீக கிராம நிகழ்வு

(29-07-2026)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்ட செயலக ஒழுங்கமைப்பில் மன்னார் மாவட்ட அறநெறிப்பாடசாலைகளின் இணையம் இணைந்து ஏற்பாடு செய்த தெய்வீக கிராம நிகழ்வு 29ம் திகதி அன்றைய தினம் புதன்கிழமை காலை மன்னார் நகர சபை கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் அ.தனுஜன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

அன்று புதன்கிழமை (29) காலை மன்னார் பிரதான பாலத் தடியில் இருந்து மன்னார் நகர மண்டபம் வரை கலாச்சார பேரணி இடம்பெற்றது.

குறித்த பேரணியில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் சைவத்திரு செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீப் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், ஆகியோர் உள்ளடங்களாக அறநெறி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும் சிறப்பு சொற்பொழிவு, சிவதாண்டவ நாடகம், கௌரவிப்பு நிகழ்வு, பண்ணிசை, நடனம், ஆகிய நிகழ்வுகள் இடம் பெற்றது.





# மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் "சவேரியன் முகிழும் வெளி" கலைக் கண்காட்சி ஆரம்பம்

(28-07-2026)

மன்னாரின் பிரபல பாடசாலை களில் ஒன்றான மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் (National School) ஏற்பாட்டில், மாணவர்களின் மறைந்த மற்றும் வெளிப்படுத்தப்படாத பன்முகத் திறமைகளை வெளிக்கொணரும் "சவேரியன் முகிழும் வெளி" எனும் விஃவல் ஆர்ட்ஸ் (Visual Art Exhibition - 2026) கண்காட்சி 28ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை காலை பாடசாலையின் ஜோசப் மண்டபத்தில் ஆரம்பமானது.

கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் ச. சாந்தியாகு (Rev.Bro.S. Santhiyagu Fsc) அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மன்னார்







மறைமாவட்ட குரு முதல்வர் கிறிஸ்து நேசரத்தினம் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். வைத்தார்.

இந்நிகழ்வில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான. ஜி. ஆத்தவன், திருமதி. எஸ். சுதர்சினி மற்றும் கல்வி வலயத்தின் நடன ஆசிரியை திருமதி. எல்.எஸ்.ஏ. ராஜ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாணவர்களின் கற்பனைத்திறனுக்கு உயிர் கொடுக்கும் வகையில் ஓவியங்கள், சிற்பங்கள், மரச் செதுக்கல் கள் உள்ளிட்ட பல நுண்கலை ஆக்கங்கள் இக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான இந்த அற்புதமான கலைப் படைப்புகள் பார்வையாளர்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்று வருகின்றன.

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் இக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக செவ்வாய்க்கிழமை (28): காலை 8:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை. புதன்கிழமை (29): காலை 8:00 மணி முதல் மதியம் 1:30 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் திறமைகளை ஆக்கபூர்வமாக வெளிப்படுத்தும் இக் கண்காட்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDEC), பழைய மாணவர் சங்கம் (OBA) மற்றும் மாணவர்கள் இணைந்து மிகச் சிறப்பாக செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party - Birthdays - Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

*(17 பக்கம் தொடர்ச்சி)*

**நீதி இல்லாமல் உண்மையான நல்லிணக்கம் உருவாகுமா?**

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை நீதியின் கேள்வியிலிருந்து பிரிக்க முடியாது.

போரில் காணாமல் போன தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய விரும்பும் குடும்பங்கள் இன்னும் உள்ளன.

போர்க்காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து உண்மையும் பொறுப்புக்கூறலும் தேவைப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற உணர்வு தொடரும் வரை, உண்மையான நல்லிணக்கத்தை உருவாக்குவது கடினம்.

எனவே, இலங்கையின் எதிர்கால அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெறும் அதிகாரப் பகிர்வைப் பற்றியதாக மட்டும் இருக்கக்கூடாது.

அது நீதி, பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**இலங்கையின் எதிர்காலம் கொழும்பில் மட்டும் தீர்மானிக்கப்படக்கூடாது**

இலங்கையின் அரசியல் அமைப்பு வரலாற்று ரீதியாக மிகவும் மையப்படுத்தப்பட்டதாக இருந்து வந்துள்ளது.

மொழி, நிலம், கல்வி, அபிவிருத்தி, பாதுகாப்பு, நிர்வாகம் மற்றும் அரசியல் அதிகாரம் தொடர்பான பல முக்கிய முடிவுகள் கொழும்பை மையமாகக் கொண்ட அரசியல் நிறுவனங்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

எனவே, எதிர்கால அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் நோக்கம் இன்னொரு சட்டத் திருத்தத்தை உருவாக்குவது மட்டுமாக இருக்கக்கூடாது.

அதற்கு பதிலாக, நாட்டின் அரசியல் அதிகாரம் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாக மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையிலான அதிகார உறவு எவ்வாறு இருக்க வேண்டும்?

சிறுபான்மை மக்களின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும்?

மொழி உரிமைகள் நடைமுறையில் எவ்வாறு உறுதி செய்யப்பட வேண்டும்?

நிலம் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான முடிவுகளில் பிராந்திய மக்களுக்கு எவ்வளவு அதிகாரம் இருக்க வேண்டும்?

அனைத்து சமூகங்களும் அரசியல் ரீதியாக சமமான பங்காளிகளாக இருப்பதை எவ்வாறு உறுதி செய்வது?

இவை அனைத்தும் எதிர்கால அரசியலமைப்பு விவாதத்தின் மையக் கேள்விகளாக இருக்க வேண்டும்.

**கல்வியியல் ஆய்வுகள் வரலாற்றை மேலும் பின்னோக்கிப் பார்க்க வேண்டும்**

இலங்கையின் அரசியலமைப்பு வரலாறு குறித்த ஆய்வுகள் 1948 ஆம் ஆண்டில் தொடங்குவது மட்டும் போதுமானதல்ல.

ஐரோப்பிய காலனித்துவத்திற்கு முற்பட்ட அரசியல் வரலாறு ஆராயப்பட வேண்டும்.

அதேவேளை, அந்தக் கால அரசியல் எல்லைகள் மற்றும் ஆட்சிமுறைகள் காலத்திற்குக் காலம் மாறியுள்ளன என்பதையும் ஆய்வுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆட்சிகள் தீவின் பல்வேறு அரசியல் அமைப்புகளை எவ்வாறு மாற்றின என்பதும் ஆராயப்பட வேண்டும்.

காலனித்துவ ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பு நவீன இலங்கை அரசை எவ்வாறு வடிவமைத்தது என்பதும் ஆய்வுக்குரியது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அனைத்து சமூகங்களுக்கும் சமமான காலனித்துவ நீக்கத்தை ஏற்படுத்தியதா?

அல்லது, காலனித்துவ ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு புதிய சுதந்திர அரசாங்கத்திடம் மட்டுமே மாற்றப்பட்டதா?

என்ற கேள்வியும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இந்த ஆய்வுகள் வரலாற்று ஆவணங்கள், காலனித்துவ பதிவுகள், தொல்லியல் ஆதாரங்கள், அரசியலமைப்புச் சட்டங்கள் மற்றும் சர்வதேச சட்ட ஆய்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நோக்கம் ஒரு அரசியல் கருத்தை மற்றொரு அரசியல் கருத்தால் மாற்றுவது அல்ல.

மாறாக, இலங்கையின் முழுமையான அரசியலமைப்பு வரலாற்றை உண்மையாகப் புரிந்துகொள்வதே நோக்கமாக இருக்க வேண்டும்.

**பல ஆண்டுகளாகத் தோல்வியடைந்த தீர்வுகளை மீண்டும் சிந்திக்க வேண்டிய நேரமா?**

பல தசாப்தங்களாக இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பல்வேறு அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி சேனாநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், பல்வேறு அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், இந்திய-இலங்கை ஒப்பந்தம், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் பல்வேறு அதிகாரப் பகிர்வு முன்மொழிவுகள் ஆகியவை அவற்றில் அடங்கும்.

ஆனால், இவற்றில் எதுவும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முழுமையான மற்றும் நீடித்த அரசியல் தீர்வை உருவாக்கவில்லை.

இதனால், ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது.

**இன்னொரு அரசியலமைப்புத் திருத்தம் மட்டும் போதுமா?**

அல்லது,

**இலங்கையின் அரசியலமைப்பு உருவான வரலாற்றையே மீண்டும் ஆய்வு செய்ய வேண்டுமா?**

இந்தக் கேள்வியைத் திறந்த மனதுடன் ஆராய்வது அவசியமாக இருக்கலாம்.

இதன் பொருள், காலனித்துவத்திற்கு முற்பட்ட அரசியல் அமைப்புகளை அப்படியே மீண்டும் உருவாக்க வேண்டும் என்பதல்ல.

நவீன உலகில் சர்வதேச சட்டம், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவை முக்கியமான அடிப்படைகளாக உள்ளன.

ஆனால், இந்த உண்மைகள் வரலாற்றை ஆராய்வதற்குத் தடையாக இருக்கக் கூடாது.

**இலங்கையின் எதிர்கால அரசியலமைப்பு எதிர்கொள்ள வேண்டிய ஐந்து முக்கிய கேள்விகள்**

இலங்கையின் எதிர்கால அரசியலமைப்புச் சிந்தனை குறைந்தது ஐந்து முக்கிய கேள்விகளை எதிர்கொள்ள வேண்டும்.

**முதலாவது:** ஐரோப்பிய காலனித்துவத்திற்கு முற்பட்ட தீவின் அரசியல் வரலாறு நவீன அரசியலமைப்பு ஆய்வுகளில் எவ்வாறு இணைக்கப்பட வேண்டும்?

**இரண்டாவது:** போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிகள் தீவின் பல்வேறு அரசியல் அமைப்புகளை எவ்வாறு மாற்றின?

**மூன்றாவது:** 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அனைத்து மக்களையும் சமமாக உள்ளடக்கிய புதிய அரசியலமைப்பு அமைப்பை உருவாக்கியதா, அல்லது காலனித்துவ காலத்தில் உருவான மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பையே தொடர்ந்து கொண்டுசென்றதா?

**நான்காவது:** ஒருங்கிணைந்த இலங்கை அரசுக்குள் உண்மையான அரசியல் சுயாட்சி, பிராந்திய அதிகாரப் பகிர்வு அல்லது கூட்டாட்சி அமைப்பு மூலம் நீடித்த தீர்வை உருவாக்க முடியுமா?

**ஐந்தாவது:** பல தசாப்தங்களாக அரசியலமைப்புத் தீர்வுகள் தோல்வியடைந்த நிலையில், காலனித்துவ நீக்கம், இறையாண்மை, சுயநிர்ணயம் மற்றும் தீவின் எதிர்கால அரசியல் அமைப்பு போன்ற ஆழமான கேள்விகளையும் ஆராய வேண்டுமா?

இந்தக் கேள்விகள் அனைத்தும் வரலாற்று ஆதாரங்கள், அரசியலமைப்புச் சட்டம், சர்வதேச சட்டம் மற்றும் ஜனநாயக உரையாடல் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயப்பட வேண்டும்.

**இலங்கையின் பிரச்சினை 1948-ல் தொடங்கவில்லை**

இலங்கையின் இனப்பிரச்சினையை 1948 ஆம் ஆண்டிலிருந்து மட்டுமே தொடங்கியதாகக் கருதுவது வரலாற்றின் ஒரு பகுதியை மட்டுமே பார்ப்பதாகும்.

நவீன இலங்கையின் இனப்பிரச்சினை என்பது மிக நீண்ட வரலாற்றுச் செயல்முறையின் விளைவாக உருவானது.

காலனித்துவத்திற்கு முற்பட்ட அரசியல் அமைப்புகள், ஐரோப்பிய காலனித்துவ ஆட்சி, காலனித்துவ மையப்படுத்தல், 1948 ஆம் ஆண்டு சுதந்திரம், சுதந்திரத்திற்குப் பிந்தைய பெரும்பான்மை அரசியல், இன வன்முறைகள் மற்றும் பல தசாப்தங்களாக நீடித்த ஆயுத மோதல் ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை.

கடந்த காலம் எதிர்காலத்தை முழுமையாகத் தீர்மானிக்காது.

ஆனால், கடந்த காலத்தைப் புரிந்துகொள்ளாமல் எதிர்காலத்திற்கான நிலையான தீர்வை உருவாக்குவது கடினம்.

**இலங்கை முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனில் பின்னோக்கிப் பார்க்க வேண்டும்**

இலங்கையின் அரசியலமைப்புச் சிக்கலைப் புரிந்துகொள்ள 1948 ஆம் ஆண்டு முக்கியமான தொடக்கப் புள்ளியாக இருக்கலாம்.

ஆனால் அது இறுதிப் புள்ளியாக இருக்க முடியாது.

இலங்கையின் அரசியலமைப்பு வரலாறு அதற்கு மிகவும் முன்னரே தொடங்குகிறது.

காலனித்துவத்திற்கு முற்பட்ட அரசியல் அமைப்புகள், ஐரோப்பிய காலனித்துவ ஆட்சி, பிரித்தானிய மையப்படுத்தப்பட்ட நிர்வாகம், 1948 ஆம் ஆண்டு சுதந்திரம், சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசியல் மாற்றங்கள் மற்றும் 2009 ஆம் ஆண்டுக்குப் பிந்தைய நிலை ஆகிய அனைத்தையும் ஒன்றாகப் பார்த்தால்தான் இலங்கையின் இன்றைய பிரச்சினையை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்.

வரலாற்று உண்மைகள் எந்த ஒரு குறிப்பிட்ட அரசியல் தீர்வையும் தானாகவே சட்டப்பூர்வமாக்காது.

ஆனால், வரலாற்றை முழுமையாக ஆராயாமல் எந்த ஒரு நீடித்த அரசியல் தீர்வையும் உருவாக்க முடியாது.

எனவே, இலங்கையின் எதிர்கால அரசியலமைப்பு விவாதம் வெறும் மாகாண சபைகள் அல்லது அதிகாரப் பகிர்வு என்ற வரம்புக்குள் மட்டுமே இருக்கக்கூடாது.

அது இன்னும் ஆழமான கேள்விகளையும் எதிர்கொள்ள வேண்டும்.

**இலங்கையின் அரசியல் அமைப்பு எவ்வாறு உருவானது?**

**காலனித்துவ ஆட்சி அந்த அமைப்பை எவ்வாறு மாற்றியது?**

**1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அந்த மாற்றத்தை உண்மையாக முடிவுக்குக் கொண்டுவந்ததா?**

**அனைத்து மக்களும் சமமான அரசியல் உரிமைகளுடன் வாழும் வகையில் தற்போதைய அரசியலமைப்பு போதுமானதா?**

**பல தசாப்தங்களாகத் தோல்வியடைந்த தீர்வுகளுக்குப் பின்னர், நாம் இன்னும் விரிவான அரசியலமைப்புச் சிந்தனையைத் தொடங்க வேண்டிய நேரம் வந்துவிட்டதா?**

இந்தக் கேள்விகளுக்கு விடை தேடுவது ஒரு சமூகத்தின் அரசியல் கோரிக்கையை ஆதரிப்பதற்காக மட்டுமல்ல.

மாறாக, இலங்கையின் எதிர்காலத்தை உண்மையான அமைதி, நீதி, சமத்துவம் மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையில் உருவாக்குவதற்காகவும் அவசியமானதாகும்.

**இலங்கை முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனில், அது தனது கடந்த காலத்தை நேர்மையாகப் பார்க்க வேண்டும்.**

**1948-ல் தொடங்காத வரலாற்றை முழுமையாகப் புரிந்துகொண்டால்தான், இலங்கையின் எதிர்காலத்திற்கான உண்மையான அரசியல் தீர்வைத் தேட முடியும்.**

*எழுதியவர் - ஈழத்து நிலவன்*
*தமிழ் தேசிய வரலாற்றாசிரியர் | உலக அரசியல், பொருளாதாரம், உளவுத்துறை மற்றும் இராணுவ விவகார ஆய்வாளர்*
*27-07-2026*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து தீவக மீனவர்கள் கடலில் இறங்கி கறுப்புக்கொடி போராட்டம் – ஜனாதிபதியிடம் அவசர நடவடிக்கை கோரியும் மனு!

பு. கஜிந்தன்

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து தீவக மீனவர்கள் கடலில் கறுப்புக்கொடி போராட்டமும் நடத்தி அத்துடன் ஜனாதிபதியிடம் அவசர நடவடிக்கை கோரியும் மனு ஒன்றையும் கையளித்தனர்!

இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான எல்லைதாண்டிய அத்துமீறல் மீன்பிடி நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்ப்பாணம் தீவகப் பகுதி மீனவர்கள் 27ம் தி ங்கட்கிழமை அன்று கடலில் இறங்கி கறுப்புக்கொடி ஏந்திய போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிகட்டுவான் இறங்குதுறை கடற்பகுதியில் படகுகளில் கடலுக்குள் இறங்கிச் சென்ற தீவக மீனவர்கள், கறுப்புக்கொடிகளை ஏந்தி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன், ஜனாதிபதிக்கு அவசர நடவடிக்கை கோரி கோரிக்கை மனுவையும் விடுத்தனர்.

இந்திய இழுவைப் படகுகளின் சட்டவிரோத அத்துமீறலால் தங்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் அழிக்கப்படுவதாக போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

குறித்த போராட்டகாரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கோரிக்கை மனுவில், நெடுந்தீவு, நயினாதீவு, வேலணை, எழுவைத்தீவு, அனலைதீவு, யாழ்குடா, பாக்குநீரிணை மற்றும் மன்னார் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த பாரம்பரிய மீனவ சமூகங்களாகிய தாங்கள், தங்களது வாழ்வாதாரம், கடல்வளம் மற்றும் நாட்டின் கடல்சார் மரபைப் பாதுகாப்பதற்காக அரசின் உடனடி தலையீட்டை கோரியுள்ளனர்.

மேலும் பல தசாப்தங்களாக இந்திய இழுவைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து அடிமடி இழுவை மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகவும், இது வெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை மட்டுமன்றி கடலடித் தளங்கள், பவளப் பாறைகள் மற்றும் மீன்களின் இனப்பெருக்கப் பகுதிகளை அழித்து கடல் உயிரினப் பல்வகைமையையும் மீன்வளத்தையும் கடுமையாக பாதிப்பதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கைகள் வடக்கின் கடல்சார் பொருளாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் இலங்கையின் கடல்வள உரிமைகளுக்கு நேரடியான அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



காரைக்கால், நாகப்பட்டினம் மற்றும் தொண்டி பகுதிகளைச் சேர்ந்த இந்திய இழுவை மடி விசைப்படகுகள், கடந்த ஜூலை 16 முதல் 18 ஆம் திகதி வரை மூன்று நாட்களில் தீவகத்தைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட பாரம்பரிய மீனவர்களின் ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நண்டு வலைகளை இழுத்தழித்து சேதப்படுத்தியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்தப் பிரச்சினைக்கு தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசுகள் உறுதியான தீர்வை வழங்கத் தவறியுள்ளதால், வடக்கு மீனவர்களிடையே ஏமாற்றமும் நம்பிக்கையின்மையும் அதிகரித்துள்ளதாகவும், இலங்கை-இந்திய இராஜதந்திர உறவுகளின் பெயரில் வடக்கு மக்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து பலியிடப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கின் பாரம்பரிய கடல்சார் வாழ்க்கை மரபு அழிந்துவிட்டால் அது வடக்கு மக்களுக்கு மட்டுமல்லாது முழு இலங்கைக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாக அமையும் என்றும், கரையோர மீனவ சமூகங்கள் நாட்டின் கடல் எல்லைகள், கடல்வளம் மற்றும் கடல்சார் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முக்கியமான சமூகமாக இருந்தபோதிலும் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய பாதுகாப்பு தங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தங்களது போராட்டம் எந்தவொரு நாட்டிற்கோ அல்லது சமூகத்திற்கோ எதிரானதல்ல என்றும், இது கடலை நம்பி வாழும் குடிமக்களின் நீதிக்கான அமைதியான குரல் என்றும் மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், இலங்கைக் கடற்பரப்பிற்குள் வெளிநாட்டு இழுவைப் படகுகள் மேற்கொள்ளும் சட்டவிரோத அடிமடி இழுவை மீன்பிடியைத் தடுக்கும் வகையில் உறுதியான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும், பாரம்பரிய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளை பாதுகாக்க வேண்டும், கடல் உயிரினப் பல்வகைமை, மீன்வளம் மற்றும் நீலப் பொருளாதாரத்தை எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்க வேண்டும், வடக்கு மக்களுக்கும் நாட்டின் ஏனைய மக்களைப் போன்று சமமான சட்டப் பாதுகாப்பும் அரசின் கவனமும் வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

”ஒரு நாட்டின் இறைமை இராஜதந்திரத்தாலும் ஆயுதப் படைகளாலும் மட்டும் பாதுகாக்கப்படுவதில்லை மக்களின் நம்பிக்கை, மனவுறுதி, பங்கேற்பு மற்றும் நாட்டின் மீதான பற்றுறுதியாலும் அது பாதுகாக்கப்படுகிறது.

வடக்கு இலங்கையின் பாரம்பரிய மீனவ சமூகங்கள் அரசின் புறக்கணிப்பால் மறைந்து போக அனுமதிக்காதீர்கள்.

கடலைப் பாதுகாப்போம். கடலை நம்பி வாழும் மக்களைப் பாதுகாப்போம். நாட்டின் கடல்சார் மரபைப் பாதுகாப்போம்.

மௌனத்தைவிட துணிவையும், தற்காலிக வசதியைவிட நீதியையும், குறுகியகால நலன்களைவிட நாட்டின் நீண்டகால நலன்களையும் தேர்ந்தெடுக்கும் தலைவரை வரலாறு நினைவுகூரும்” எனக் கோரிக்கை மனுவில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
CR 129, 548, 174, 182, 297, 274, 283, 169, 351, 352, 404, 549, 558, 529, 537, 555, 915, 755, 760, 790, 911, 882, 847, 843, 708, 798, 800, 854, 1055, 2073, 649, 732, 738, 861, 703, 898, 948, 768, 766, 855, 844, 867, 879, 980, 518, 519, 634.

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca
4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

# The Toronto City Council not only allocated government land to the Tamil Community Centre but also waived the Building Permit Fees

# தமிழ்ச் சமூக மையத்திற்கு காணியை வழங்கியதோடு மட்டுமன்றி- கட்டட அனுமதிப் பத்திர கட்டணத்தையும் 'விட்டுக் கொடுத்த' ரொறன்ரோ நகர சபை







கனடா வாழ் தமிழ் மக்களுடைய ஒரு நீண்ட நாள் கனவாக இருந்த ஸ்காபுறோ "தமிழ்ச் சமூக மைய"த்திற்கு உரிய காணியை நீண்ட கால குத்தகைக்கு வழங்கியதோடு மட்டுமன்றி. நகரசபையின் நடைமுறையில் உள்ள கட்டட அனுமதிப் பத்திர கட்டணத்தையும் விட்டுக் கொடுத்த ரொறன்ரோ நகர சபை இந்த தகவலை அண்மையில் நடைபெற்ற உற்சாகமான வைபவத்தில் ரொறன்ரோ மாநகரத்தின் மேயர் ஒலிவியா சோ அவர்கள் மூலம் தமிழ்ச் சமூகத்திற்கு அறிவித்தது.

கடந்த 24-07-2026 அன்று வெள்ளிக்கிழமையன்று 251 **Staines Road- Scarborough,** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள தமிழ்ச் சமூக மையம் எதிர்காலத்தில் கம்பீரமமாக எழுந்து நிற்கவுள்ள காணியில் நடைபெற்ற மேற்படி உற்சாகமான வைபவத்தில் ரொறன்ரோ மாநகரத்தின் மேயர் ஒலிவியா சோ இதற்கான அறிவிப்பைச் செய்தபொழுது அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கானவர்கள் கரகோசம் செய்து தங்கள் வரவேற்பையும் நன்றியையும் பகிர்ந்து கொண்டனர்.




மேற்படி வைபவத்தில் தமிழர்களல்லா அரசியல் பிரமுகர்களோடு எமக்கான தமிழ்ச் சமூக மையம் அமையவுள்ள

ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அரசியல் பிரதிநிதிகளான அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி (மத்திய அரசு) அமைச்சர் விஜய் தணிகாசலம்(மாகாண அரசு) மற்றும் நீதன் சண்முகராஜா(ரொறன்ரோ நகர சபை) ஆகியோரும் அங்கு உரையாற்றினார்கள்.

மேற்படி மூவரும் அங்கு உரையாற்றுகையில் தமிழ்ச் சமூக மையத்தின் கட்டட நிதிக்காக எமது சமூகம் திரட்ட வேண்டிய 19 மில்லியன் டாலர்களுக்கு மேலதிகமான தொகையை திரட்டும் பணியில் உழைத்த மையத்தின் நிதிசேகரிப்பு குழுவிற்கும் நிதி அன்பளிப்பு வழங்கிய தனி நபர்கள்-அமைப்புக்கள்- வர்த்தக அன்பர்கள்- மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

# 'செம்மணிப் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும்' என ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கை விடுத்த நீதி சமாதான ஆணைக்குழு'









யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ள உறவுகளுக்கு நீதி கோரி, யாழ்ப்பாணம் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் அமைதிப் போராட்டம் ஒன்30ம் திகதி அ ன்று வியாழக்கிழமை செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரினின் ஒழுங்கமைப்பில், அரியாலை புனித யூதா ததேயு திருச்சொரூபம் முன்பாக ஆரம்பமான இந்தப் பேரணி செம்மணி சந்தியைச் சென்றடைந்தது.

பேரணியின் நிறைவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளரிடம் கையளிக்கப்படவுள்ள அவசர வேண்டுகோள் அறிக்கையை அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் வாசித்தார்.

அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ள முக்கிய கோரிக்கைகள் வருமாறு:-

01. சர்வதேச விசாரணை: செம்மணி மனிதப் புதைகுழியில் 2026ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி வரையில் சிறுவர்கள் மற்றும் சிசுக்களின் எச்சங்கள் உட்பட 454 மனித என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

02. சர்வதேச தரநிலைகள்: மனித எச்சங்களை அகழ்ந்தெடுத்தல், அடையாளம் காணல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை "மினசோட்டா நெறிமுறை" உள்ளிட்ட சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், சுயாதீன டி.என்.ஏ. பரிசோதனை, குடும்பங்களின் பங்கேற்பு மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

03. ஐ.நா. கண்காணிப்பு மற்றும் பிரசன்னம்: செம்மணி அகழ்வுப் பணிகளை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தொடர்ந்து கண்காணித்துச் சான்றுகளைப் பாதுகாக்க வேண்டும். மேலும், சாட்சியாளர்களின் பாதுகாப்புக்காக யாழ்ப்பாணத்தில் ஐ.நா. மனித உரிமைப் பொறிமுறையின் பிரசன்னம் அவசியமாகும்.

இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணம் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், யாழ்ப்பாணம் மாகாண அமல மரித்தியாகிகள் சபையின் முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக், அருட்தந்தையர்கள், துறவிகள் மற்றும் அருட்சகோதரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

சினிமா

# "மொத ராத்திரி" படத்தின் பதாகை வெளியானது




"மொத ராத்திரி" படத்தின் பதாகை வெளியானது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகி வரும் "மொத ராத்திரி" படத்தில் அனிஷ்மா கதாநாயகியாக நடித்து வருகிறார். "குட் பேட் அக்லி", "டியூட்" ஆகிய படங்களை தொடர்ந்து, மைத்ரி நிறுவனம் தயாரிக்கும் மூன்றாவது தமிழ் திரைப்படம் இதுவாகும். ராஜா கருப்பசாமி இயக்கியுள்ள இப்படத்தில் ரிஷிகாந்த் மற்றும் அனிஷ்மா அனில்குமார் ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு பரத் ஷங்கர் இசையமைக்கிறார். புதிதாகத் திருமணமான ஜோடியின் காதல் நகைச்சுவைத் திரைப்படமாக இது எடுக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் "மொத ராத்திரி" படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக படக்குழு அறிவித்தது. தற்போது பின்னணிப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில், படத்தின் அடுத்த கட்ட அறிவிப்புகளுக்கான பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், "மொத ராத்திரி" திரைப்படத்தின் பதாகை தற்போது வெளியாகி உள்ளது. இந்த பதாகை படத்தின் மீதான கவனத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1207



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோவில்
## மட்டக்களப்பு

*" விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து. "*

எழுத்து, சொல் இவற்றின் அடிப்படையிலன்றி, கணபதியின் வடிவத்தின் அடிப்படையிலும் விளக்கங் காணப்படுகின்றது. ஏனைய தெய்வங்களினின்றும் கணபதியை வேறுபடுத்துவது அவரின் யானை முகமாகும். இது "ஓம்" என்னும் பிரணவ வடிவிலுள்ளது. எனவே கணபதி ஓங்காரப்பொருளின் அடையாளம் என்பது பரவலான விளக்கமாகக் காணப்படுகின்றது. கணபதியின் தும்பிக்கையின் அமைப்பை நோக்குவோர் இவ்விளக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். கணபதி வழிபாடு பல சமயத்தாராலும் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்புப்பிரதேசத்திலும் விநாயக வழிபாடு சிறப்புற்றுக் காணப்படுகின்றது.

மட்டக்களப்பில் வீரமுனை என்னும் அழகிய தமிழ்க்கிராமம் சம்மாந்துறையின் அருகே அமைந்துள்ளது. பண்டைக்காலத்தில் மட்டக்களப்பு, வீரமுனையைச் சார்ந்தே இருந்தது. இங்கிருந்து மேல்திசையில் சற்றுத் தொலைவில் அம்பாறை காணப்படுகின்றது. இங்கு ஓர் குளமுண்டு இதனை அம்பாறை வில் என்று அழைப்பர். அடர்த்தியான காடுகள் நிறைந்த இப்பிரதேசத்தில் இக்குளம் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் காட்டுயானைகள் அதிகமாக வாழ்வதால் அச்சந்தரும் பிரதேசமாக இப்பிரதேசம் விளங்குகின்றது. மலைக்குன்றுகளும், காடும், என்று ஆலயவரலாற்றிலே பதிவு செய்திருந்தேன். ஆந்நிலை இனறு அமைந்துவிட்டது. தாம் தரிசித்த ஆலயங்களை மீண்டும் கண்டு வணங்கவும், வழிபடவும் மக்கள் ஆர்வங் காட்டி வருகின்றனர்.

மட்டக்களப்பிலுள்ள அம்பாறை வில்லுப்பிள்ளையார் ஆலயத்தின் வரலாறு சற்று வித்தியாசமாகக் காணப்படுகின்றது. ஆலயமும் குளமும் அமைந்த சூழ்நிலையில் ஆலயம் அமைந்திருந்தது. ஆனாலும் பிற்காலத்தில் மூர்த்தி இல்லாது ஆலயமும் குளமும் மட்டுமே எஞ்சிக் காணப்பட்டது. மூர்த்தி தலம், தீர்த்தம் என அமைந்திருந்த நிலையில், மூர்த்தி எவ்வாறு மறைந்தது என்ற எண்ணம், துரைச்சாமி என்ற அன்பர் மனதிலே எழுந்தது. அன்னியர் ஆதிக்கம் பெற்ற காலத்திலே, அவர்கள் இந்து ஆலயங்களை அழிப்பதில் தீவிர கவனம் செலுத்தியுள்ளனர். ஆயிரக்கணக்கான ஆலயங்கள் கொள்ளையிடப்பட்டு அழிக்கப்பட்டமை வரலாறு கண்ட உண்மை. இவ்வாறான சூழ்நிலையில் அடியவர்கள், திருவுருவங்களை நீர்நிலைகளில் போட்டுவைப்பதும், நிலத்தில் புதைத்துப் பாதுகாப்பதும் வழக்கமாகக் காணப்பட்டுள்ளது. ஆலயமும், குளமும் அருகருகே இருந்தமையால் அந்நியரின் அழிவிற்குப் பயந்து அடியவர் யாராவது ஆலயத்திருவுருவத்தைக் குளத்திலே போட்டு வைத்திருப்பார்களோ என்ற எண்ணம் அடியவர் துரைச்சாமி அவர்களிடம் மேலோங்கியது. இத்தகைய எண்ணங்களோடு காணப்பட்ட துரைச்சாமி அவர்களுக்கு ஆனைக்குட்டிச்சாமியாரின் தொடர்பு பக்கபலமாகக் காணப்பட்டது.

ஆனைக்குட்டி சுவாமிகள் பெயர்பெற்ற ஒரு சித்தர். இவருடைய சமாதி காரைதீவிலே காணப்படுகின்றது. சமாதியுள்ள இடத்திலே பல அற்புதங்கள் நிகழ்வதாக அனுபவித்த அன்பர்கள் கூறுவர். அருளும் அற்புதமும் கொண்ட ஆலயங்கள் பலவற்றிலும் சித்தர்களின் சமாதி இருப்பது குறிப்பிடத்தக்கது. கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டும் வல்லமை படைத்தவர்களாகவும், அற்புதங்களைச் செய்ய வல்லவர்களாகவும் சித்தர்கள் விளங்குவர். ஆனைக்குட்டிச் சாமியார் இவ்வாறான சிறப்புக்களைக் கொண்டவர். அடியவர் துரைச்சாமியாரின் திருவுருவத் தேடுதலுக்குப் பக்கபலமாக ஆனைக்குட்டிச்சாமியார் விளங்கியுள்ளார். ஆனைக்குட்டிச்சாமியாரின் திருவாக்கின்படி ஆலயத்திற்கு அருகிலுள்ள குளத்தில், ஆனைமுகனின் விக்கிரகம் உள்ளது என்று துரைச்சாமியார் அறிந்து கொண்டார்.

விநாயகரை மனதிருத்தி ஆலயத்திற்கு அருகிலுள்ள குளத்தில் இறங்கித் தேடும் முயற்சியை துரைசாமி மேற்கொண்டார். காட்டு யானைகள் சாரி சாரியாகக் குளிப்பதையும், முதலைகளின் வதிவிடமாகவும் விளங்கும் குளத்தில் துரைச்சாமியார் இறங்கித் தேடுதலில் ஈடுபட்டார். நாட்கணக்காக குளத்தில் தேடி, இறுதியில் விநாயக விக்கிரகத்தைக் கண்டுபிடித்தார். குளத்திலிருந்து பெரும்பாடுபட்டுக் கரைக்குக் கொண்டுவந்து தனக்குத் தெரிந்த விதத்திலே பீடம் அமைத்து, பந்தலிட்டுச் சிறுகோவிலாக்கி வழிபாடியற்றி வந்தார்.


திருவுருவம் கிடைத்த செய்தி அண்டைக்கிராமங்களுக்கும் பரவியது. அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோயில் என அழைக்கப்பட்ட அந்தக் கோயிலை நாடி வேளாண்மைத் தொழில்புரியும் வீரமுனை, மல்வத்தை, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, நீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த கமக்காரர் பயபக்தியோடு பொங்கலிட்டு வழிபாடு செய்யும் வழக்கம் ஏற்பட்டது. கணபதியை நிலவளம், விளைச்சல் பெருக்கம், வாழ்க்கை நலம், அறிவுப்பேறு ஆகியவற்றை நாட்டுக்கும், மக்களுக்கும் அளிக்கும் தெய்வமாக இந்துக்கள் கருதுவர்.

பிற்காலத்திலே ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் அதிகாரிகளும், ஊழியர்களும் இக்கோயில் வழிபாட்டிலே கலந்து கொண்டபின்னர் பல மாற்றங்கள் ஏற்பட்டது. குளத்திலே மறைந்திருந்து வெளிவந்த பிள்ளையாரின் மகிமை எங்கும் பரவலாயிற்று. சாதி மத பேதமின்றிப் பலரும் நேர்த்திகள் வைத்து வழிபாடு செய்து வணங்கும் கோயிலாக அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோவில் விளங்கியது.

இந்நிலையில் ஒரு முஸ்லீம் அன்பருடைய மாடு காணாமற் போய்விட்டது. தனது மாட்டைக் கண்டுபிடித்துத் தருமாறும், கிடைத்தால் பெருங் காணிக்கை செலுத்துவதாகவும் அந்த அன்பர் வேண்டிக் கொண்டார். எனினும் மாடு கிடைக்கவில்லை. பலரும் வேண்டுதல் செய்யும்போது கொடுக்கும் பிள்ளையார், தான் காணிக்கை செலுத்துவதாகக் கூறியும் ஏன் தனது கோரிக்கையை ஏற்கவில்லை என்று ஆத்திரங்கொண்டு, கோடரியால் விநாயகர் திருவுருவத்தைத் தாக்கி, ஒரு திருக்கரத்தைத் துண்டித்தார். அவ்வேளையில் தொலைந்துபோன அவரது மாடு எங்கிருந்தோ வந்துசேர்ந்ததாயினும், கைகால் வழங்காது தனது தவறை மன்னிக்குமாறு வேண்டி இறந்துபோனதாகக் கூறுவர். அன்பை ஆதாரமாகக் கொண்ட சரணாகதியின் மூலம் பலரும் நன்மைபெற்றபோதிலும், காணிக்கை மூலம் தனது காரியத்தை சாதிக்க நினைத்ததாலோ என்னவோ உடனடியாக அவருடைய எண்ணம் நிறைவேறவில்லை.


**வளரும்..**




Summer Get Together
Reconnect • Reminisce • Relax • Enjoy
SK NOAVARODAYA OSA CANADA
SKANDA OLD STUDENTS ASSOCIATION
Meet, Catch Up & Make New Memories!
A day filled with great company, delicious food, fun games and wonderful memories!
DATE: SUNDAY AUGUST 09, 2026
TIME: 10.30 AM – 4.30 PM
VENUE: MILLIKEN PARK PICNIC SITE 2
ENJOY A VARIETY OF DELICIOUS FOOD!
LIVE COOKING APPAM!
DELICIOUS MUTTON CURRY!
AND MANY MORE TASTY TREATS!
FUN GAMES FOR ALL AGES!
OUTDOOR GAMES
BOARD GAMES
CARD GAMES
FUN FOR EVERYONE!
Good Food Great Friends Memories That Last!
All are invited!
Come, Join & Enjoy a Day to Remember!


Meesalai Peoples' Association - Canada
Annual GettoGether
மீசாலை மக்கள் ஒன்றியம் - கனடா
பெருமையுடன் நடாத்தும்
கோடைகால ஒன்றுகூடல் 2026
நாள்: Sunday, August 02, 2026
இடம்: G. Ross Lord Park
4801 Dufferin Street
(Dufferin & Finch)
நேரம்: 9:00Am to 6:00PM
August 02 9AM-6PM
Food: Vegetarian and non-vegetarian food will be served
குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கான
விளையாட்டுகள் விளையாடி மகிழ்த்திட வாருங்கள்
அனைவரையும் அழைத்து வாருங்கள்
உங்கள் பழைய நண்பர் மற்றும் குடும்பத்தினரை சந்திக்கவும்,
கிராமத்து உணவுகளை உண்டு மகிழவும் கிராம விளையாட்டுகளை
விளையாடவும் ஒரு அரிய சந்தர்ப்பம்
மேலதிக தகவலுக்கு எங்களை தொடர்பு கொள்ள
முருகன்: 416-791-9531
பரன்: 416-558-1419
416 888 4970
விஜயன்: 647-272-4252


இந்தப் பிரபஞ்சத்தில் ஒவ்வொருவரும் மாணவரே,
இயற்கையே அவர்களின் குரு!
– யோகி ஸ்ரீநிவாஸ் ஆர்க்கா
யோகி ஸ்ரீநிவாஸ் ஆர்க்கா அவர்கள் நேரடியாக் கலந்து சிறப்பிக்கும்
குரு பூர்ணிமா உற்சவம்
யூலை 29ம் திகதி புதன்கிழமை
மாலை 5.30 மணிக்கு
J & J Buroak Banquet Hall
50 Anderson Avenue
Markham, Ontario L6E 1A5
Canada
மேற்படி ஆன்மீக நிகழ்வில் கலந்து கொள்ள முன்பதிவு செய்வதற்கு
(416) 602-7776 என்னும் இலக்கத்தில் Sheena என்பவரை அழைக்கவும்.
கீழே காணப்படும் இணைப்பில் மேற்படி உற்சவத்தின்
நேரடி ஒளிபரப்பை நீங்கள் பார்த்து பரவசமடையலாம்!
(Link: vimeo.com/event/6062648
உற்சவத்தின் இறுதியில் மஹாபிரசாதமும் வழங்கப்பெறும்!
World renowned author, teacher, philosopher, and founder of Arka Mahaganapathy,
Arka Foundation, Mysore and Centre for Conscious Awareness charities worldwide.
Having developed his own intuitive method, Arka Dhyana Intuitive Meditation,
Yogi Arka has been travelling around the world.
www.srinivasarka.org
SRINIVAS ARKA


1993
அழைப்பிதழ்
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும்
நூல்களின் சங்கமம் ( நூல் கண்காட்சி 2026 )
Confluence of Books
(Book Exhibition 2026)
ஆகஸ்ட் 16, 2026 ஞாயிற்றுக்கிழமை
காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை
தமிழிசைக் கலாமன்ற மண்டபம்
1120, Tapscott Road, Unit 3
Scarborough, ON, M1X 1S4
இரண்டாவது தடவையாக நூல்களின் கண்காட்சி இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்ச்சியில் பல எழுத்தாளர்கள் தமது நூல்களைக்
காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் முன் வந்துள்ளார்கள்.
சில புதிய நூல்களின் வெளியீடுகளும் நடைபெறவுள்ளன.
நூல்களின் கண்காட்சியும் விற்பனையுடன் இளையோர்
நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் குடும்பத்துடன்
பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்
கொள்கின்றோம். அதிகமானளவு
இளையோர்களையும் இந்த நிகழ்ச்சியில்
பங்கேற்றுப் பயனடைய வேண்டுகின்றோம்.
அன்புடன்
ரவி கனகசபை, தலைவர்
முனைவர் வாசுகி நகுலராஜா, செயலாளர், vasuki.nagularajah@gmail.com
இராச்குமார் குணரட்ணம், பொருளாளர்
மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்கள்
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524







29ம் ஆண்டில்... 29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1582 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 31, 2026

# "சங்ககாலக் கவிதைகளின் தொடர்ச்சியை பேணுவதில் கனடாக் கவிஞர் கழகத்தின் உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள்"

## கழகத்தின் வெளியீடான "கவிச்சரம்" வெளியீட்டு விழாவில் தலைவர் "மாவிலிமைந்தன்" சண்முகராஜா!



"கனடாவில் முதன்முதலாக கவிதை இலக்கண வகுப்புக்களை ஆரம்பித்து இன்று 15வருடங்களை எட்டியுள்ள எமது கனடா தமிழ்க் கவிஞர் கழகமானது எண்ணற்ற மரபுக்கவிஞர்களை இந்த மண்ணில் மாத்திரமல்ல வேறு நாடுக-ளிலும் உருவாக்கியுள்ளது. ஆரம்பத்தில் குறைந்தளவு அங்கத்தவர்களைக் கொண்டதாக விளங்கிய எமது கழகம் தற்போது இளைய தலைமுறையைச் சேர்ந்த கவிஞர்களை உள்வாங்கி அவர்களும் ஆர்வத்துடன் மரபுக் கவிதைகளை வடிப்பது எப்படி என்பதை மரபுக் கவிதை வகுப்புக்களில் கற்றுவருகின்றார்கள். அவர்கள் அனைவரும் தங்களை தரமான மரபுக்கவிஞர்களாக உயர்த்திக் கொள்ளும் கடினமான பணியைச் சுமந்தவர்களாக இருந்து அத்துடன் எமது கவிஞர் கழகத்தின் வளர்ச்சியிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றார்கள். இவ்வாறான கவிஞர் பெருமக்கள் நாம் வாழும் புலம்பெயர்ந்த நாடான கனடாவில் தரமானதோர் தமிழிலக்கியப் பணியை ஆற்றியும் வருகின்றார்கள்"

(தொடர்டச்சி 2ம் பக்கம்)



# செம்மணி மனிதப் புதைகுழியில் மழைக்கவசத்துடன் சிறுவனின் எலும்புக்கூட்டுத் தொகுதி மீட்கப்பட்டது மக்களின் மனங்களை உலுக்கியது!

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின்போது புதிதாக 7 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்தோடு மழைக்கவசத்துடனும், காலில் காலுறை அணிந்தவாறும் சிறுவனின் என்புத் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 41ஆம் நாள் அகழ்வு 24ம்திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கடந்த 24ம்திகதி வெள்ளிக்கிழமை அன்றைய அகழ்வின் போது புதிதாக 7 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன.

(தொடர்டச்சி 5ம் பக்கம்)

# மார்க்கத்தில் இயங்கும் 'Greenborough Seniors Wellness Club' நடத்திய "பூங்கா ஒன்றுகூடலும் பொழுது போக்கு நிகழ்வும்

மார்க்கம் நகரில் திருமதி செல்வா அருள்ராஜசிங்கம் தலைமையில் சிறப்பாக செயற்படும் **'Greenborough Seniors Wellness Club'** அமைப்பு நடத்திய "பூங்கா ஒன்றுகூடலும் பொழுது போக்கு நிகழ்வும்" கடந்த 20-07-2026 திங்கட்கிழமையன்று மார்க்கம்- ஸ்காபுறோ ஆகிய நகரங்களுக்கு இடையிலுள்ள " மிலிக்கன் பூங்கா"வில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் அமைப்பின் செயற்பாடுகளையும் பாராட்டி உரையாற்றிய பின்னர் தனது அலுவலகத்தின் சார்பான வாழ்த்துப் பத்திரத்தை திருமதி செல்வா அருள்ராஜசிங்கத்திடம் ஒப்படைத்தார்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)




# கனடாவில் காலமான இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் சபேஸ்வரனின் மறைவிற்கு யாழ். ஊடக மன்றத்தின் இரங்கல்!




யாழ்.ஊடக மன்றம்
Jaffna Media Forum
jaffnamediaforum@gmail.com

இலங்கையில் நீண்ட காலம் அச்சு ஊடகங்களில் பணியாற்றி நன்கு அறியப்பெற்றவராக விளங்கிய ஆறுமுகம் சபேஸ்வரன் அவர்கள் கனடாவில் 29ம் திகதி புதன்கிழமை மாலை காலமானார். சிறிது காலம் உடல்நலம் குன்றியிருந்த அவர் சில நாட்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் புதன்கிழமை அன்று மரணத்தை தழுவினார். அன்னாரது மறைவையொட்டி யாழ்ப்பாண ஊடக மன்றம் இரங்கல் அறிக்கையை அனுப்பிவைத்துள்ளது

நீண்ட கால ஊடக அனுபவத்தை அவர் கொண்டிருந்ததுடன் யாழ். பல்கலைக்கழக ஊடக வழங்கல் பயிற்சி மையத்தின் விரிவுரையாளராக கடமை புரிந்து பல ஊடகவியலாளர்களை உருவாக்கிய பெருமையும் அவரை சாரும். அத்துடன் தினக்குரல் பத்திரிகையின் முன்னைநாள் செய்தி ஆசிரியராகவும் சிறப்பாக பணியாற்றி பல விடயங்களை வெளிக்கொணர்ந்து சமூகத்துக்கு பல நல்ல விடயங்களை புரிந்ததில் அவரது பங்கு அளப்பரியது.